# வைப்பகம்

2026 யூலை - செத்தெம்பர் மலர் 10 இதழ் 07 - 09

அறிவுத் தேடலின் மையம்

ரூ. 80/-


02 டிஜிட்டல் கொடுப்பனவுகளின் வளர்ச்சிக்கான வினையூக்கியாக விளங்கும் நிதியியல் தொழில்நுட்பம்

06 அதிக வெப்பமாதலைப் புறக்கணிப்பதா: காலநிலை மாற்றத்திற்கு மத்தியில் நாணயக் கொள்கை பற்றி மீளச் சிந்தித்தல்

13 இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் மீதான பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வையை வலுப்படுத்தல்: நிதியியல் நடவடிக்கைச் செயலணி தரநியமங்களின் பிரயோகம்

18 திறந்த வங்கித்தொழில் - டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வங்கித்தொழிலில் முன்மாதிரிமிக்க மாற்றம்


ISSN 5655-3587

9 775655 358165

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் கட்டுரையாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

ஒரு பிரதியின் விலை ரூ.80.00

தபாற்செலவு ரூ.150.00

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்



# டிஜிட்டல் கொடுப்பனவுகளின் வளர்ச்சிக்கான வினையூக்கியாக விளங்கும் நிதியியல் தொழில்நுட்பம்

**எம் கே டி என் ஹன்சி**
மூத்த உதவிப் பணிப்பாளர்
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்

### அறிமுகம்

நிதியியல் தொழில்நுட்பம் என்பது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிதியியல் தீர்வுகளை வழங்கும் முறையென வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. இது உலகளாவிய நிதியியல் முறைமையில் நிலைமாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக உருவெடுத்து, நிதியியல் பணிகளை வழங்கும் முறையை கணிசமானளவு நெறிப்படுத்தியுள்ளது. தோற்றம்பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள் 2017இல் வயதுவந்த ஒருவருக்கு 55 கொடுக்கல்வாங்கல்களிலிருந்து 2024இல் வயதுவந்த ஒருவருக்கு 251 கொடுக்கல்வாங்கல்கள் என்ற ரீதியில் துரிதமான அதிகரிப்பை நிரூபணமாக்கி இருந்தமையினால், நிதியியல் தொழில்நுட்பப் புத்தாக்கங்கள் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் துரிதமான வளர்ச்சிக்கு கணிசமானளவு உந்துதலாக இருக்கின்றன (பரீட், மற்றும் ஏனையோர்., 2025). செல்லிட பணப்பைகள் (mobile wallets), கியூஆர் (QR) அடிப்படையிலான கொடுப்பனவு முறைமைகள், செல்லிடத்தொலைபேசி வங்கித்தொழில் செயலிகள், இணையவழி வங்கித்தொழில் தளங்கள், கொடுப்பனவு நுழைவாயில்கள் மற்றும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் தளங்கள் போன்ற பல்வேறு புத்தாக்கக் கொடுப்பனவுத் தீர்வுகளை நிதியியல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியுள்ளன.

### நிதியியல் தொழில்நுட்பத்தினால் இயக்கப்படும் டிஜிட்டல் கொடுப்பனவுகளினூடாக பெறுமதி உருவாக்கம்

நிதியியல் தொழில்நுட்பத்தின் மூலம் செயற்படுத்தப்படும் டிஜிட்டல் கொடுப்பனவுகள் பணத்தாள் பயன்பாடு மற்றும் பாரம்பரிய கொடுப்பனவு உட்கட்டமைப்பு மீதான தங்கியிருத்தலை குறிப்பிடத்தக்களவில் குறைக்கின்ற அதேவேளை, கொடுப்பனவுகளின் வேகத்தினையும் பாதுகாப்பினையும் மேம்படுத்தி கொடுக்கல்வாங்கல் செலவினைக் குறைப்பதுடன் தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்குமான ஒட்டுமொத்த வசதியினையும் மேம்படுத்துகின்றன (பிஜஸ், 2018). மேலும், அதிகரித்த பரவலாக்குதல் மற்றும் பல்வகைப்படுத்தல் என்பவற்றினூடாக நிதியியல் தொழில்நுட்பமானது நிதியியல் முறைமையின் தாக்குபிடிக்கும் தன்மையையும் வினைத்திறனையும் மேம்படுத்துகின்றது. பல்வேறு வகையான டிஜிட்டல் தளங்கள் மற்றும் பணி வழங்குநர்களை இயலச்செய்வதன் மூலம், ஒட்டுமொத்த முறைமையும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளைக் குறைத்து, நிதியியல் அதிர்வுகளின் தாக்கத்தைத் தணிப்பதுடன் ஒட்டுமொத்த முறைமையின் உறுதிப்பாட்டினையும் வலுப்படுத்துகின்றது (எப்எஸ்பி, 2017).

குறிப்பாக, நிதியியல் தொழில்நுட்பமானது டிஜிட்டல் கொடுப்பனவுகளின் தொழில்நுட்பவியல் உந்துசக்தியாக

செயற்படுவதோடு, இதன்மூலம் நிதியியல் பணிகளுக்கான பெறுவழியினை விரிவுபடுத்துவதனூடாக உலகளாவிய நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான முதன்மை நுழைவாயிலாகவும் செயற்படுகின்றது. பரவலாக செல்லிடத்தொலைபேசிகளை உடமையாகக் கொண்டிருப்பதன் மூலம் ஆதரவளிக்கப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான நிதியியல் தீர்வுகளினால் பெருமளவில் உந்தப்பட்டு, டிஜிட்டல் தொடர்புகையின் விரிவாக்கமானது உலகளவில் கணக்குகளை உடமையாகக் கொண்டிருப்பதில்[1] 2011இல் 51 சதவீதத்திலிருந்து 2024இல் 79 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு பெருமளவில் பங்களித்துள்ளது (க்கெளப்பர், மற்றும் ஏனையோர்.,2025). இதன்பயனாக, வீட்டலகுகள், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் என்பவற்றுக்கு மத்தியில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதுடன் அனைவரையுமுள்ளடக்கிய மற்றும் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்றது (FSB, 2017).

### டிஜிட்டல் கொடுப்பனவுச் சூழலமைப்பின் உலகளாவிய மாதிரிகள்

பல நாடுகள் நிதியியல் தொழில்நுட்பத்தினால் இயக்கப்படும் டிஜிட்டல் கொடுப்பனவு சூழலமைப்புகளின் வெற்றிகரமான மாதிரிகளை நடைமுறைப்படுத்தியுள்ளன. அண்மையிலுள்ள நாடுகளுக்கு மத்தியில், நேபாள் ராஷ்டிர வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நேபாளத்தின் பாரிய ஒன்றோடொன்று ஒத்தியங்கும் கொடுப்பனவு வலையமைப்பான Fonepay, 60இற்கும் மேற்பட்ட நிதியியல் நிறுவனங்களையும், 20 மில்லியனிற்கும் அதிகமான பயனாளர்களையும் அத்துடன் 1.7 மில்லியன் வணிகர்களையும் இணைக்கின்றது. Fonepay தளத்தின் விரைவான வளர்ச்சியினையும் பரவலான பயன்பாட்டையும் எடுத்துக்காட்டும் வகையில், நேபாள ரூ.2.62 பில்லியன் கொண்ட மொத்த கொடுக்கல்வாங்கல் பெறுமதியுடன் 2025 மாச்சு 30 அன்று இத்தளமானது ஒரு மில்லியனுக்கும் அதிகமான நாளாந்த கியூஆர் கொடுக்கல்வாங்கல்களை விஞ்சியது (எனான்.,2025). மேலும், 2016இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தியாவின் ஒருங்கிணைந்த கொடுப்பனவு இடைமுகமானது (UPI)பணப் பயன்பாட்டின் மீதான தங்கியிருந்தலை குறிப்பிடத்தக்களவில் குறைத்ததன் மூலம் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது, இந்தியாவின் ஒருங்கிணைந்த கொடுப்பனவு இடைமுகமான PhonePe, ஏனைய நிதியியல் தொழில்நுட்பம் மற்றும் வங்கி செல்லிட செயலிகள் போன்ற தளங்களினூடாக மாதமொன்றுக்கு 18 பில்லியனுக்கும் அதிகமான கொடுக்கல்வாங்கல்களைச் செயற்படுத்தி, ஏனைய உலகளாவிய கொடுப்பனவு முறைமைகளை விஞ்சியதுடன் விரைவான டிஜிட்டல் கொடுப்பனவுகளில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக நிலைநிறுத்துகின்றது (கோப்ஸ்டேக், மற்றும் ஏனையோர்.,2025). குரனா மற்றும் ஏனையோரின் (2025) கருத்துகளிற்கமைவாக, இந்தியாவில் டிஜிட்டல் கொடுப்பனவின் பயன்பாடு நிதியியல் வசதிக்குட்படுத்தலுடன் வலுவானத் தொடர்பைக் கொண்டுள்ளதுடன் இதன் பயன்பாட்டில் 10 சதவீத அதிகரிப்பு உள்ளடக்கக் குறியீட்டில் ஏறத்தாழ 7.8 சதவீத அதிகரிப்பொன்றுக்கு வழிவகுத்துள்ளது. மேலும், கிராமப் புறங்களில் UPI இயலச்செய்யப்பட்ட வங்கித்தொழிலுக்கான பெறுவழியின்[2] இலக்கிடப்பட்ட விரிவாக்கம் நிதியியல் வசதிக்கு உட்படுத்தல் இடைவெளியினை கணிசமாகக் குறைக்கவல்லது என்பதனை இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

அதேவேளை, சீனாவில் நிதியியல் தொழில்நுட்பத்தின் பயன்பாடானது அலிபே மற்றும் விசெட் (WeChat) போன்ற தளங்களினால் நிரூபிக்கப்பட்ட முன்னேற்றமடைந்த டிஜிட்டல் கொடுப்பனவுச் சூழலமைப்பொன்றுக்கு வழிவகுத்துள்ள அதேவேளை கென்யாவில் அந்நாட்டின் முன்னணி செல்லிட இலத்திரனியல் பணச் சேவையான எம்-பெசா (M-Pesa) (எம்-மொபைல், பெசா- மணி) அடிப்படையாகக் கொண்ட நிதியியல் தீர்வுகள் நிதியியல் வசதிக்குட்படுத்தலை குறிப்பிடத்தக்களவில் மேம்படுத்தி வறுமைக் குறைப்பிற்கும் பங்களித்துள்ளது (பரீட், மற்றும் ஏனையோர்.,2025).

### இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் வளர்ச்சி

இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுப் பயன்பாடு, தொழில்நுட்ப முன்னேற்றங்களினூடாக நிதியியல் தொழில்நுட்ப அபிவிருத்திகளுடன் இணைந்து, இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்கள் மற்றும் மேற்பார்வை என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, குறிப்பிடத்தக்களவில்

1 நிதியியல் வசதிக்குட்படுத்தலின் முக்கியக் குறிகாட்டி. இது சேமிப்புக்கள், கொடுப்பனவுகள், மற்றும் கொடுகடன் போன்ற முறையான நிதியியல் பணிகளுக்கான தனிப்பட்டவர்களின் பெறுவழியை எடுத்துக்காட்டுகின்றது.

2 மூன்றாந்தரப்பு நிதியியல் தொழில்நுட்பச் செயலிகள் (PhonePe, Google Pay, Paytm) மற்றும் வங்கிச் செல்லிடத்தொலைபேசி செயலிகள்

முன்னேற்றமடைந்துள்ளது. இது பணம் மீதான தங்கியிருத்தலை குறைத்துள்ளதுடன் பாதுகாப்பான, வினைத்திறன்மிக்க மற்றும் செலவு சிக்கனமான டிஜிட்டல் கொடுப்பனவுத் தீர்வுகளுக்கான பெறுவழியை மேம்படுத்தியுள்ளது. மேலும், தொடர்பூட்டல் உட்கட்டமைப்பின், குறிப்பாக 2025ஆம் ஆண்டின் இறுதியளவில் உயர்ந்தளவான இணைய ஊடுருவல் (100 ஆட்களுக்கு 110) மற்றும் செல்லிடத்தொலைபேசி ஊடுருவல் போன்றவற்றின் விரிவாக்கத்தினால் இலங்கையின் நிதியியல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டு, இதனூடாக, நாடு மேலும் டிஜிட்டல் மற்றும் அனைவரையுமுள்ளடக்கிய நிதியியல் சூழலமைப்பினை நோக்கி நிலைமாற்றமடைவதற்கு வசதியளித்துள்ளது.

இலங்கையின் நிதியியல் தொழில்நுட்பச் சூழலமைப்பினுள் டிஜிட்டல் கொடுப்பனவுகளே முன்னணிப் பிரிவாகத் திகழ்கின்றன. 2015இல் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி (CEFTS) அறிமுகப்படுத்தப்பட்டமையானது அதேநேர வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களை இயலச்செய்வதற்கு ஏதுவாக அமைந்து, ஜஸ்ட்பே, லங்காகியூஆர், லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளம் மற்றும் GovPay போன்ற நிதியியல் தொழில்நுட்பத்தை இயலச்செய்கின்ற கொடுப்பனவு முறைகளை அடித்தளமாகக் கொண்டுள்ளதோடு, உடனடிக் கொடுப்பனவுகளை நோக்கிய குறிப்பிடத்தக்களவு மாற்றத்தை இது பிரதிபலித்துள்ளது. கொடுப்பனவு பணி வழங்குநரை பொருட்படுத்தாது, நிதியியல் தொழில்நுட்பம் மற்றும் வங்கி என்ற இரண்டும் உள்ளடங்கலாக ஒன்றுடனொன்று ஒத்தியங்கும் தன்மை கொண்ட கொடுப்பனவுச் செயலிகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் வங்கிகளுக்கிடையே தங்குதடையின்றிய நிதிய மாற்றலை மேற்கொள்வதற்கு இது இயலச்செய்கின்றது. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியானது 2025இல், ரூ.23.1 றில்லியன் கொண்ட மொத்த பெறுமதியுடன் 260 மில்லியனுக்கும் அதிகமான கொடுக்கல்வாங்கல்களை செயற்படுத்தியது. இது 2020இன் இலங்கையின் மொ.உ.உற்பத்தியின் 15.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 70 சதவீதத்தை விடவும் அதிகமான அளவிற்கு சமமானதாகும் என்பதோடு சில்லறைக் கொடுப்பனவுத் துறையில் அதன் அதிகரித்த முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. மரபுசார்ந்த விற்பனை மைய உட்கட்டமைப்பிற்கு வசதியான மாற்றீடொன்றினூடாக சிறிய மற்றும் நடுத்தரத்தொழில் முயற்சிகளுக்கு நன்மையளிக்கும் வகையில், லங்காகியூஆர் கொடுப்பனவுத் தளமானது வங்கிகள் மற்றும் நிதியியல் தொழில்நுட்பத் தளங்களுக்கிடையே ஒன்றுடனொன்று ஒத்தியங்கும் தன்மையை மேம்படுத்தி குறைந்தளவான செலவினைக் கொண்ட டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களை இயலச்செய்துள்ளது. அதேவேளை, GovPay போன்ற முன்னெடுப்புகள் வினைத்திறன்மிக்க மற்றும் வெளிப்படையான பொதுச் சேவைக் கொடுப்பனவுகளை இயலச்செய்வதன் மூலம் டிஜிட்டல் கொடுப்பனவுச் சூழலமைப்பினை வலுப்படுத்தியுள்ளன. இதன்மூலம், இம்முன்னெடுப்புகள் குறிப்பாக வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத மற்றும் வங்கிச் சேவைகளைக் குறைந்தளவு பெற்றுக்கொள்கின்ற மக்களிடையே நிதிசார் பெறுவழியினை விரிவுபடுத்துகின்றன. மேலும், நிதியியல் முறைமை வினைத்திறனை மேம்படுத்தலையும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டு, புதிய நிதியியல் தொழில்நுட்பங்களைப் பரீட்சிப்பதற்கும் உருவாக்குவதற்கும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலை வழங்கும் அதன் பரிசோதனைக் கட்டமைப்பினூடாக இலங்கை மத்திய வங்கி நிதியியல் தொழில்நுட்ப அபிவிருத்தியினை வசதிப்படுத்துகின்றது.

## முடிவுரை

நிதியியல் தொழில்நுட்பமானது டிஜிட்டல் கொடுப்பனவுகளின் வளர்ச்சிக்கான சக்திவாய்ந்த வினையூக்கியாக தோற்றம்பெற்று, மரபுசார்ந்த நிதியியல் முறைமைகளை மிகவும் வினைத்திறன்மிக்க, பாதுகாப்பான, செலவுச் சிக்கனமிக்க மற்றும் அனைவரையுமுள்ளடக்கிய சூழலமைப்பிற்கு மாற்றமடையச்செய்து குறைவான பணத்தைப் பயன்படுத்தும் பொருளாதாரத்தை நோக்கி மாறுதலடைவதை வசதிப்படுத்தியுள்ளது. எனினும், நிதியியல் தொழில்நுட்பத்தினால் இயக்கப்படும் கொடுப்பனவுகள் இணையப் பாதுகாப்புடன் தொடர்புடைய இடர்நேர்வுகளைக் குறைக்கின்ற, வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் தரவு இரகசியத்தன்மையை மேம்படுத்துகின்ற அதேவேளை ஒன்றுடனொன்று ஒத்தியங்கும்தன்மை, அரச தனியார் கூட்டிணைவு, மற்றும் தற்போதுள்ள கொடுப்பனவு உட்கட்டமைப்புக்களுடன் காத்திரமிக்க ஒத்துழைப்பு

போன்றவற்றை ஊக்குவிக்கின்ற நன்கு சமநிலைப்படுத்தப்பட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்புக்களையும் பாதுகாப்பு பொறிமுறைகளையும் வேண்டிநிற்கின்றன. மேலும், உட்கட்டமைப்பு சார்ந்த கட்டுப்பாடுகள் மற்றும் நிதியியல் அறிவுரீதியிலான இடைவெளிகள் என்பவற்றுக்கு தீர்வுகாண்பது, நிதியியல் பெறுவழியை மேம்படுத்தி, நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதியியல் உறுதிப்பாடு என்பவற்றுக்கு ஆதரவளிப்பதில் நிதியியல் தொழில்நுட்பத்தினால் இயக்கப்படும் கொடுப்பனவுகளின் வகிபாகத்தை வலுப்படுத்துவதில் இன்றியமையாததாக விளங்குகின்றது.

## உசாத்துணைகள்


Anon., 2025. *fonepay.com.* [Online]
Available at: https://fonepay.com/blogs/Fonepay-QR-1-Million-transactions

Arner, D. W., Barberis, J. N. & P. Buckley, R., 2015. Paradigm?, The Evolution of Fintech: A New Post-Crisis Paradigm?. *University of Hong Kong Faculty of Law Research Paper No. 2015/047*, 20 October .

BIS, 2018. *Sound Practices Implications of fintech developments for banks and bank supervisors,* Basel: Bank for International Settlements.

Copestake, A., Kirti, D. & Peria, M. S. M., 2025. *FinTech Note : Growing Retail Digital Payments The Value of Interoperability,* Washington, DC: International Monetary Fund.

Fareed, F., Huayta-Zapata, K., Nguyen-Xuan, D. & Segoviano, M., 2025. *Financial Access Survey (FAS),* Washington, D.C: International Monetary Fund.

FSB, 2017. *Financial Stability Implications from FinTech,* Basel: Financial Stability Board.

Khurana, L. et al., 2025. Fintech And Financial Inclusion In India: A Data-Driven Analysis Of Digital Payments And Banking Access. *Journal of Informatics Education and Research.*

Klapper, L., Singer, D., Starita, L. & Norris, A., 2025. *The Global Findex Database 2025: Connectivity and Financial Inclusion in the Digital Economy,* Washington, DC: World Bank Publications.



# அதிக வெப்பமாதலைப் புறக்கணிப்பதா: காலநிலை மாற்றத்திற்கு மத்தியில் நாணயக் கொள்கை பற்றி மீளச் சிந்தித்தல்


**எஸ் பி வை டபிள்யு சேனாதீர**
துணைப் பணிப்பாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

**எம் எச் எஸ் அனுருத்திமா**
மூத்த முகாமையாளர்
பிரதேச அலுவலகம் - மாத்தறை


**காலநிலை மாற்றம் என்றால் என்ன?**

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாலும் அபிவிருத்தியடைந்த நாடுகளாலும் எதிர்கொள்ளப்பப்பட்டு வருகின்ற எண்ணிலடங்காத இடர்நேர்வுகளுக்கும் பாதிப்பிற்குட்படும் தன்மைகளுக்கும் மத்தியில், காலநிலை மாற்றமானது கொள்கை வகுப்பாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் கல்வியாளர்களுக்கும் அதிகரித்து வரும் முக்கிய கரிசனையொன்றாக தோற்றம்பெற்றுள்ளது. ஒட்டுமொத்தமாக, காலநிலை மாற்றம் என்பது இயற்கை மற்றும் மானிட செயற்பாட்டு காரணிகள் ஆகிய இரண்டும் இணைந்ததன் காரணமாக, வெப்பநிலை, மழைவீழ்ச்சி, காற்று வீசும் திசை மற்றும் பூமியின் காலநிலை அமைப்பின் ஏனைய அம்சங்கள் என்பவற்றில் ஏற்படும் தொடர்ச்சியான மாற்றங்களைக் குறிக்கின்றது. கைத்தொழிற்புரட்சிக்குப் பின்னர், மனித வாழ்க்கை நிலைமைகளின் துரிதமான முன்னேற்றத்திற்கு இயற்கை வளங்களை அதிகளவில் பயன்படுத்துவதை ஆதரவளித்து, காலநிலை மாற்றம் துரிதமடைவதற்கு தூண்டியது. இது பரந்தளவிலான தாக்கங்களை கொண்டமைந்து, சூழலியல் முறைமைகள், பொருளாதாரங்கள் மற்றும் உலகெங்கிலுமுள்ள சமுதாயங்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றது. காலநிலை மாற்றத்தின் விளைவுகள் உலகளாவிய காா்பன் உமிழ்விற்கான அவற்றின் பங்களிப்பின் மட்டத்தை பொருட்படுத்தாமையானது, உலகின் அனைத்து நாடுகளாலும் உணரப்பட்டு வருகின்றன.

காலநிலை மாற்றமானது பாரியளவில் பொருளாதார மற்றும் சமூக இழப்புகளை ஏற்படுத்தும் அதிகரித்து செல்கின்ற உலகளாவிய வெப்பநிலைகளையும் அடிக்கடி ஏற்படும் தீவிரமான வானிலை நிகழ்வுகளையும் (தோமஸ், அல்பா்ட் மற்றும் ஹெப்பா்ன், 2014) விளைவிக்கின்றது. 2000 தொடக்கம் 2021 வரையானக் காலப்பகுதியில், உலகளாவிய ரீதியில் மொத்தமாக வானிலையுடன் தொடா்புடைய 441 தீவிர அனா்த்தங்கள் இடம்பெற்றுள்ளதோடு, ஏறத்தாழ 2 பில்லியனுக்கும் அதிகமானவா்களை ஒட்டுமொத்தமாக பாதித்துள்ளன. இந்நிகழ்வுகள் ஏறத்தாழ 0.5 மில்லியன் மரணங்கள் மற்றும் 1 மில்லியனுக்கும் அதிகமான காயமடைந்தவா்கள் உள்ளடங்கலாக, 1.5 மில்லியனுக்கும் அதிகமான உயிரிழப்புகளை விளைவித்ததுடன், ஏறத்தாழ ஒரு மில்லியன் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுவதற்கு வழிவகுத்தன. இதற்கு மேலதிகமாக, அவை ஐ.அ.டொலா் 1.5 றில்லியனை விஞ்சி நேரடியான பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தின (அனா்த்தக் குறைப்பு மற்றும் அவசரகால முகாமைத்துவக் கல்வி நிலையம், 2022). இலங்கையின் பின்னணியில், உட்கட்டமைப்பு, வேளாண்மை வீடமைப்பு மற்றும் நிவாரணங்கள் என்பவற்றுடன் தொடா்புடைய இயற்கை அனா்த்தங்களிலிருந்தான ஒன்றுசோ்ந்த சராசரி வருடாந்த இழப்பானது ஐ.அ.டொலா் 0.4 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது (ஆசிய அபிவிருத்தி வங்கி, 2021). காலநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட வெள்ளப்பெருக்கு

மற்றும் புயல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையிலான நீண்டகால உற்பத்தித்திறனை குறைத்து, உட்கட்டமைப்புகளை சேதப்படுத்தக்கூடிய அதேவேளை, மீள்கட்டடவாக்கங்கள் மற்றும் காப்புறுதி என்பவற்றிற்கான செலவுகளையும் அதிகரிக்கின்றன. இயற்கை அனர்த்தங்களுக்கு அதிகம் முகங்கொடுக்கும் நாடுகள் உயர்ந்தளவிலான பணவீக்கம், செலாவணி வீதப் பெறுமதியிழப்பு அழுத்தங்கள் மற்றும் பொருளாதாரச் சுருக்கங்கள் போன்ற காரணங்களால் அதிகளவிலான பேரண்டப் பொருளாதார நிலையற்றத் தன்மைகளை எதிர்கொள்ளக்கூடும். மேலும், காலநிலை மாற்றத்தால் தூண்டப்படும் இயற்கை அனர்த்தங்களும் காலநிலை நிலைமைகளில் ஏற்படும் படிப்படியான மாற்றங்களும் நீண்டகாலத்தில் வேளாண்மைத் துறையின் உற்பத்தித்திறனைக் குறைக்கக்கூடும். அதேவேளை, அதிகரித்து வரும் வெப்பநிலையானது சூழலியல் முறைமைகளை நிரந்தரமாக நிலைமாற்றி, பல்வேறு தாவர மற்றும் விலங்கு இனங்களின் நிலைத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்றது. இது கரையோரப் பிரதேசங்கள் அரிக்கப்படுகின்ற கடல் மட்டங்களின் உயர்வுடன் இணைந்து, சுற்றுலா மற்றும் மீன்பிடித் துறைகளை அச்சுறுத்தலுக்குட்படுத்துகின்றது.

இதற்கு மேலதிகமாக, அரசாங்கங்களும் வியாபாரங்களும் அனர்த்த பதிலிறுப்பு, காப்புறுதி, ஏற்றதாக்கிக்கொள்ளுதல் மற்றும் தணித்தல் முயற்சிகள் என்பவற்றிற்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகி, அதன் விளைவாக, அபிவிருத்திக்கான ஏனைய உற்பத்தி துறைகளிலிருந்து அரிதான வளங்களை திசைமாற்றுகின்றன. உதாரணமாக, 2025 திசெம்பரில் நாட்டை கடுமையாகப் பாதித்த டித்வா புயலின் காரணமாக அனர்த்த நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்பில் ரூ. 500 பில்லியன் தொகையை இலங்கை அரசாங்கம் ஒதுக்க வேண்டியிருந்தது. ஒட்டுமொத்தமாக, இக்காரணிகள் பொருளாதார வளர்ச்சியை மந்தப்படுத்துவதோடு, சந்தைகளுக்கும் மக்களின் வாழ்வாதாரங்களுக்கும் நிச்சயமற்றத்தன்மையை உருவாக்கக்கூடும். குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களும், பொருளாதாரத்தில் பாதிக்கப்படக்கூடிய நிலையிலிருக்கும் வகுப்பினரும் இயற்கை அனர்த்தங்களால் விகிதசமமின்றி பாதிப்பிற்குள்ளாவதைக் கருத்திற்கொள்ளும் போது காலநிலை மாற்றம் மக்களிடையே நிலவும் சமத்துவமின்மையை மேலும் தீவிரப்படுத்தக்கூடும். காலநிலையுடன் தொடர்புடைய அனர்த்தங்கள் தொடர்ச்சியாக அதிகரித்தும் தீவிரமடைந்தும் வரும் நிலையில், மத்திய வங்கிகள் உள்ளடங்கலாக கொள்கை வகுப்பாளர்கள் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் சவால்களை இனிமேலும் புறந்தள்ள முடியாது.

## மத்திய வங்கிகளின் பொறுப்பாணைகள் எவை?

விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதே பொதுவாக மத்திய வங்கிகளின் பொறுப்பாகும். இருப்பினும், சில சந்தர்ப்பங்களில், பொருளாதார உறுதிப்பாட்டினை அல்லது முழுமையான தொழில்நிலையை அடைதலானது மத்திய வங்கியின் பொறுப்பாணையின் பாகமொன்றாக காணப்படலாம்[1]. எனவே, காலநிலை மாற்றமானது பணவீக்கம், பொருளாதார வளர்ச்சி, வட்டி வீதங்கள் மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய அதிர்வுகளின் கால இடைவெளி அதேபோன்று தீவிரத்தன்மை என்பவற்றில் எவ்வாறு தாக்கம்செலுத்துகின்றது என்பதனை மத்திய வங்கிகள் மதிப்பீடுசெய்ய வேண்டும். அதேவேளை, காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகள்

1. பெரும்பாலான மத்திய வங்கிகள், நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான பொறுப்பையும் கொண்டுள்ளன. இதனடிப்படையில், தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் மற்றும் ஒட்டுமொத்த நிதியியல் முறைமையின் மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை கண்காணிப்பதற்கும் மதிப்பீடுசெய்வதற்கும், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வற்கு காலநிலைசார் இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவற்கும் மத்திய வங்கிகள் தேவைப்படுத்தப்படுகின்றன. மேலும், ஒழுங்குமுறைப்படுத்தல்களினூடாக காலநிலைத் தாக்குப்பிடிக்குந்தன்மை முதலீடுகளை மத்திய வங்கிகள் முனைப்புடன் ஊக்குவிக்கலாம். எனினும், இக்கட்டுரையானது, விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றில் மத்திய வங்கியின் வகிபாகத்திற்கிடையேயான தொடர்பின் மீது மாத்திரம் கவனம் செலுத்துவதோடு நிதியியல் உறுதிப்பாட்டுடன் தொடர்பான அம்சங்களை உள்ளடக்கவில்லை.

   விலை உறுதிப்பாட்டினை அடைதலும் பேணுதலும் இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாணையாகும் அதேவேளை, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுவது அதன் மற்றுமொரு முக்கிய குறிக்கோளாகும். இருப்பினும், விலை உறுதிப்பாட்டினைப் பேணும் குறிக்கோளை முன்னெடுத்துச் செல்லும் போது, இலங்கை மத்திய வங்கியானது, ஏனைய காரணிகளுக்குள், சாத்தியமான மட்டத்தினை நோக்கி வெளியீட்டினை உறுதிப்படுத்துவதையும் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

சொத்துகளின் மதிப்பையும் பிணையுறுதியின் தரத்தையும் வலுவிலக்கச்செய்து, மத்திய வங்கிகளின் ஐந்தொகையிலும் நாணய ஊடுகடத்தல் பொறிமுறைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே, நாணயக் கொள்கை தொழிற்பாடுகள் மீதான காலநிலை இடர்நேர்வுகளை தணிக்கும் நடவடிக்கைகளையும் மத்திய வங்கிகள் கருத்திற் கொள்ள வேண்டியதாகவிருக்கும். மறுபுறத்தில், சில மத்திய வங்கிகளின் (எடுத்துக்காட்டாக, ஹங்கேரி, சீனா, பங்களாதேஷ்) திட்டவட்டமான பொறுப்பாணை, விலை உறுதிப்பாடு எனும் மையக் குறிக்கோளுக்கு அப்பாற்சென்று, காலநிலைத் தாக்குப்பிடிக்கும் தன்மையை கட்டியெழுப்புவதற்கும் குறைந்த கார்பன் வெளியேற்றப் பொருளாதாரத்திற்கு மாறுவதற்கும் முனைப்புடன் பங்களிப்பதற்கு அவற்றை தேவைப்படுத்துகின்றது. அத்தகைய மத்திய வங்கிகளுக்கு, அவற்றின் மையப் பொறுப்பாணையை நிறைவேற்றுவதில் எவ்விதமான விட்டுக்கொடுப்புமின்றி காலநிலை மாற்றம் மீதான இரண்டாந்தர இலக்கினையும் அடைதலானது சமநிலையைப் பேண வேண்டிய செயலொன்றாகவிருக்கும்.

காலநிலை மாற்றத்திற்கு தீர்வுகாண்பது மத்திய வங்கிகளின் திட்டவட்டமான பொறுப்பாணையொன்றாக காணப்படாத போதிலும், காலநிலை மாற்றமானது அடிக்கடியான மற்றும் தீவிரமான வழங்கல் இடையூறுகள் அத்துடன் கேள்விப் பக்க அதிர்வுகள் என்பவற்றினூடாக விலை உறுதிப்பாட்டுப் பொறுப்பாணையினை அடைந்துகொள்வதற்கான சவால்களை தோற்றுவிக்கக்கூடும் என்பதனைக் கருத்திற்கொண்டு, குறைவான கார்பன் வெளியேற்றப் பொருளாதாரத்திற்கான நிலைமாற்றத்தில் அவை முக்கியப் பங்காற்ற வேண்டிய நிலை ஏற்படலாம். பொருளாதார சுபீட்சத்தினை பேணிவளர்த்தல் போன்ற பரந்தளவிலான குறிக்கோள்கள் மத்திய வங்கிகளுக்கு பொறுப்பாணையாக வழங்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அத்தகைய குறிக்கோள்களில் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய இலக்குகளும் உள்ளடங்கியதாகப் பொருள் கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, ஏனைய பல அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களைப் போன்று, காலநிலை மாற்றத்திற்கு தீர்வுகாண்பது அவற்றின் பொறுப்பாணையொன்றல்லாத போதும், மத்திய வங்கிகள் தன்னார்வமாக அதனைத் தேர்ந்தெடுக்கலாம்.

**காலநிலை மாற்றமும் நாணயக் கொள்கைக்கான சவால்களும்**

காலநிலை மாற்றம், விலை உறுதிப்பாட்டின் மீதான, குறிப்பாக பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புக்களின் கீழ் மத்திய வங்கியின் பொறுப்பாணையை அடைந்துக்கொள்வதில் குறிப்பிடத்தக்க சவால்களை உருவாக்குகின்றது. பொதுவாக, இயற்கை அனர்த்தங்கள் பணவீக்கத்திலும் வெளியீட்டிலும் தற்காலிக தாக்கத்தையே கொண்டுள்ளன. எனவே, அத்தகைய தற்காலிக அதிர்வுகளின் தாக்கங்கள் காலப்போக்கில் மறைந்து செல்லுமென எதிர்பார்க்கப்படுவதால், மத்திய வங்கிகள் அவற்றிற்கு பதிலளிக்காமல் இருப்பதற்கு தெரிவுசெய்யலாம். எனினும், காலநிலை மாற்றத்தால் தூண்டப்படும் இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடியும் தீவிரமானதாகவும் நிகழும்போது, அவை தொடர்ச்சியாக நிரம்பல் பக்க இடையூறுகளை உருவாக்குவதுடன், உட்கட்டமைப்பிற்கான சேதங்கள் மற்றும் குறைந்தளவிலான உற்பத்தித் திறன் என்பவற்றினால் வெளியீட்டின் மீது சாத்தியமான நீண்டகால தாக்கங்களையும் கொண்டிருக்கும் அதேவேளை, வருமானம் மற்றும் நம்பிக்கை என்பவற்றில் ஏற்படும் இழப்புக்களினூடாக கூட்டுக் கேள்வியினை நலிவடையச் செய்கின்றன. இயற்கை அனர்த்தங்களின் விளைவுகள் தற்காலிகமானவையா அல்லது தொடர்ச்சியானவையா என்பதை வேறுபடுத்தி அறிதல், அவற்றின் கேள்வி மற்றும் நிரம்பல் பக்க தாக்கங்களின் தன்மையைப் புரிந்துகொள்ளல் அத்துடன் நாணயக் கொள்கை பதிலிறுப்புக்களின் பொருத்தமான நேரம் மற்றும் பருமனை நிர்ணயித்தல் என்பன மத்திய வங்கிகளுக்கான முக்கிய சவால்களாகக் காணப்படுகின்றன.

மேலும், கிரமமான நிரம்பல் பக்க இடையூறுகள், உணவு, வலு மற்றும் ஏனையவற்றின் விலைகளில் உயர்ந்தளவிலான தளம்பல்களை ஏற்படுத்தி, மத்திய வங்கிகள் பணவீக்கத்தினை நிர்ணயிக்கப்பட்ட இலக்கு மட்டத்திலோ அல்லது இலக்கு வீச்சிற்குள்ளோ பேணுவதனை மேலும் கடினமாக்குகின்றது. இலக்கிலிருந்தான உண்மைப் பணவீக்கத்தின் மீண்டும் மீண்டும் நிகழும் விலகல்கள் நாணயக் கொள்கை மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் நம்பகத்தன்மையை குறைத்து, இதன்மூலம் பணவீக்க எதிர்பார்க்கைகள் நிலைநிறுத்தப்படாமைக்கு வழிவகுக்கும்.

காலநிலை மாற்றம், மத்திய வங்கி அதன் கொள்கைசார் ஏற்பாட்டை மதிப்பிடுவதை சிக்கலாக்குகின்றது. மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலையானது (அதாவது, கொள்கை தளர்வானதா, நடுநிலையானதா அல்லது இறுக்கமானதா என்பது) "இயல்பான வட்டி வீதத்திற்கு"[2] எதிராகவே வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. அத்தாக்கத்தின் பருமனோ அல்லது திசையோ தெளிவாகக் கணிக்க முடியாததாகக் காணப்படுகின்ற போதிலும், காலநிலை மாற்றமானது, பொருளாதார வளர்ச்சி, சேமிப்புப் பழக்கம், இடர்நேர்வு மிகை மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் போன்ற பல்வேறு வழிமுறைகளின் மூலம் பொருளாதாரமொன்றின் இயல்பான வட்டி வீதத்தை மாற்றியமைக்கக்கூடும் (நிதியியல் முறைமையை பசுமையாக்குவதற்கான வலையமைப்பு, 2020). உதாரணமாக, இயற்கை அனர்த்தங்களால் அடிக்கடி பாதிக்கப்படும் நாடுகள், தாழ்ந்தளவிலான பொருளாதார வளர்ச்சி மற்றும் உற்பத்தித்திறன் அத்துடன் மக்களின் உயர்ந்தளவிலான முன்னெச்சரிக்கைமிக்க சேமிப்பு என்பவற்றின் காரணமாக தாழ்ந்தளவிலான இயல்பான வட்டி வீதத்தினை கொண்டிருக்கலாம். மறுபுறத்தில், காலநிலை மாற்றத்திற்கு ஏற்றதாக்கிக்கொள்ளும் முதலீடுகள் இயல்பான வட்டி வீதத்தினை உயர்த்தக்கூடும். எனவே, காலநிலை மாற்றத்திலிருந்து எழும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள், இயல்பான வட்டி வீதத்தினை காலப்போக்கில் மாற்றத்திற்குட்படுத்தக்கூடும். இயல்பான வட்டி வீதமானது இயல்பாகவே மதிப்பிடுவதற்கு கடினமானதாகவிருக்கும் அவதானிக்கப்படமுடியாத மாறிலியொன்றென்பதால், அத்தகைய காலநிலை மாற்றத்தால் உந்தப்படும் மாற்றங்கள், நாணயக் கொள்கை தளர்வுமிக்கதா அல்லது மட்டுப்படுத்தப்பட்டதா என்பது பற்றிய மத்திய வங்கிகளின் மதிப்பீட்டினை மேலும் சிக்கலுக்குட்படுத்தி, இதன் விளைவாக, கொள்கை வழுக்களின் இடர்நேர்வினை அதிகரிக்கச்செய்கின்றது.

தீவிரமடைந்த காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் நாணயக் கொள்கை ஊடுகடத்தல் வழிகளை பாதிப்படையச்செய்து, நாணயக் கொள்கையின் செயல்திறனைக் குறைத்து செயற்றிறன்மிக்கதாக்கி நாணயக் கொள்கை பெறுபேறுகளை முன்கூட்டியே கணிப்பதையும் கடினமாக்குகின்றது. காலநிலை மாற்றமானது, சொத்து விலைகள், கொடுகடன் நிலைமைகள், செலாவணி வீதங்கள், பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் இடர்நேர்வு மிகை என்பவற்றில் ஏற்படும் மாற்றங்களினூடாக ஒட்டுமொத்த நாணயக் கொள்கை ஊடுகடத்தலை பாதிப்பிற்குட்படுத்தக்கூடும். இதன் விளைவாக, நுகர்வு, முதலீடு மற்றும் பணவீக்கம் என்பவற்றின் மீதான நாணயக் கொள்கையின் தாக்கங்கள் குறிப்பாக, பேரண்டப்பொருளாதாரத்தின் மீது தீவிரமான காலநிலை நிகழ்வுகளின் எதிர்பாராத அளவில் மாறுபடும் தாக்கங்களின் காரணமாக அளவமைத்தலை கடினமானதாக்கி, கொள்கைத் தீர்மானங்களில் இடர்நேர்வினையும் செயற்றிறனற்ற கொள்கை பதிலிறுப்புகளையும் அதிகரிக்கச்செய்கின்றது.

அதேவேளை, அத்தகைய தாக்கங்களின் கச்சிதமான பருமன் நிச்சயமற்றதாகக் காணப்பட்டாலும், காலநிலை மாற்றத்தினை முறியடிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நிலைமாற்றக் கொள்கைகள் உற்பத்தியில் இடையூறுக்குட்படுத்துவதனூடாகவும் குறைவான உற்பத்தித் திறனினூடாகவும் அதிக செலவுடைய கட்டமைப்புசார் சீராக்கங்களை தேவைப்படுத்துவதனூடாகவும் சாத்தியமான வெளியீட்டினை பாதகமானளவில் பாதிப்பிற்குட்படுத்தலாம். கார்பன் விலையிடல் மற்றும் பசுமை தொழில்நுட்பங்களை நோக்கிய மாற்றங்கள் போன்ற நிலைமாற்ற வழிமுறைகள் சாத்தியமான மேலதிக பணவீக்க அழுத்தங்களை உருவாக்கக்கூடுமெனினும், அத்தகைய அழுத்தங்களின் அளவும் நீடிக்கும் காலமும் இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படவில்லை. பசுமை தொழில்நுட்பங்களை நோக்கிய நிலைமாற்றமானது, உயிர்ச்சுவட்டு எரிபொருட்களிலிருந்து குறைந்தளவிலான கார்பன் வலு மூலங்களுக்கு நிலைமாற்றமடைவதுடன் தொடர்புடையதாக காணப்படுகின்ற அதேவேளை, அத்தயை நிலைமாற்றமானது தொடர்புடைய விலைகளின் பரந்தளவிலான பொருளாதார ரீதியிலான மாற்றங்களுக்கும், பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளமைப்பிற்கும், நுகர்வு போக்குகளிற்கும் அதேபோன்று உற்பத்தியின் வலு செறிவிற்கும் வழிவகுக்கக்கூடும் (லேன், 2024). இதன் விளைவாக, குறைந்தளவிலான

2. நிலையான பணவீக்கம் மற்றும் முழுமையான தொழில்நிலை என்பவற்றுடன் ஒத்திசைவான உண்மை வட்டி வீதம் இயல்பான வட்டி வீதம் என அழைக்கப்படுகின்றது. மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதமானது இயல்பான வட்டி வீதத்தினை விட அதிகமாக (அல்லது குறைவாக) இருந்தால், அதன் நாணயக் கொள்கை நிலைப்பாடானது இறுக்கமானதாகக் (அல்லது தளர்த்தப்பட்டதாக) கருதப்படும்.

கார்பனை வெளியிடுகின்ற மாற்றமானது பொருளாதாரம் முழுவதும் குறிப்பிடத்தக்க கட்டமைப்புசார் மாற்றங்களை விளைவிக்கக்கூடும். எனவே, பொருளாதாரத்தில் அத்தகைய கட்டமைப்புசார் மாற்றங்களுக்கு மத்திய வங்கியின் நாணயக் கொள்கை எந்த அளவிற்கு மற்றும் எவ்வாறு எதிர்வினையாற்ற வேண்டும் என்பது தெளிவற்றதாகவே காணப்படுகின்றது.

பேரண்டப்பொருளாதார எதிர்வுகூறல் மாதிரிகளில், தற்காலிக இடையூறுகளை ஏற்படுத்தும் அதிர்வுகள், குறிப்பாக அவற்றின் தாக்கம் தற்காலிகமானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படும் சூழலில், மைய எதிர்வுகூறல் கட்டமைப்பொன்றினுள் கூட்டிணைக்கப்படுவதை விட எதிர்வுகூறலிற்கான இடர்நேர்வுகளாகவே பொதுவாக கருதப்படுகின்றன. எனினும், காலநிலை மாற்றமும் காலநிலையுடன் தொடர்புபட்ட இயற்கை அனர்த்தங்களும் பொருளாதாரத்தின் வழங்கல் மற்றும் கேள்வி நிலைமைகளில் குறுகிய காலத்திலிருந்து நீண்டகாலம் வரை மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும். எனவே, குறிப்பாக காலநிலை மாற்றத்தால் பாதிப்பிற்குட்படும் பொருளாதாரங்களில், பேரண்டப்பொருளாதார எதிர்வுகூறல் மாதிரிகளுக்குள் காலநிலையுடன் தொடர்புபட்ட மாறிலிகளையும் சூழ்நிலைகளையும் உள்ளிணைப்பதற்கான தேவைப்பாடொன்று அதிகரித்து வருகின்றது. இருப்பினும், காலநிலை இடர்நேர்வுகள் கட்டாயமாக மத்திய வங்கியின் மைய எதிர்வுகூறல் மாதிரியின் முக்கியமொனதொரு பாகமாக இருக்க வேண்டுமென இது பரிந்துரைக்கவில்லை. மாறாக, காலநிலை மாற்றமானது அதன் கட்டமைப்பு மற்றும் மீண்டும் மீண்டும் நிகழும் தன்மை காரணமாகவும் குறுகிய காலத்திலிருந்து நீண்டகாலத்தில் நாணயக் கொள்கையின் ஊடுகடத்தலையும் செயற்றிறனையும் பாதிக்கும் இயலுமை காரணமாகவும் பேரண்டப்பொருளாதாரக் கட்டமைப்பில் சிறப்புக் கவனத்தினை வேண்டலாம்.

நாணயக் கொள்கை தொழிற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற மத்திய வங்கிகளின் சொந்த சொத்துப்பட்டியல்கள் மீது காலநிலை மாற்றத்துடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளின் தாக்கத்தினை தணிக்க வேண்டிய தேவைக் காணப்படுவதால், காலநிலை மாற்றம் அத்தகைய தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான சவால்களை உருவாக்குகின்றது. மத்திய வங்கிகள் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய நிதியியல் மற்றும் நிலைமாறத்தக்க இடர்நேர்வுகளுக்கு அதிகளவில் உள்ளாகக்கூடிய, இறைமையற்ற பிணையுறுதி உடைமைகள் மற்றும் சொத்துக் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற விடயங்களில் குறிப்பாக இக்கரிசனையானது முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது. காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய பௌதீக ரீதியான மற்றும் நிலைமாற்ற ரீதியான இடர்நேர்வுகள், மத்திய வங்கிகளினால் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்களின் பெறுமதி, திரவத்தன்மை மற்றும் கடன் நம்பகத்தன்மை என்பவற்றினை பாதிக்கக்கூடும். எனவே, நீண்டகால வீச்சில் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் மீதான காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வினை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கிகள் போதியளவு தகவல்களையும், பகுப்பாய்வு இயலளவினையும் கொண்டிருக்க தேவைப்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான நாணயக் கொள்கை தொழிற்பாடுகள் ஒப்பீட்டளவில் குறுகிய கால வீச்சொன்றின் மீது கவனம் செலுத்தி நடாத்தப்படுகின்றபோதிலும், சொத்துக் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற சில மரபுவழியற்ற நாணயக் கொள்கை தொழிற்பாடுகள் மத்திய வங்கிகளை நீண்டகால காலநிலைசார் இடர்நேர்வுகளுக்கு உள்ளாக்கக்கூடும். 2026இன் இரண்டாம் அரையாண்டிலிருந்து, ஐரோப்பிய மத்திய வங்கியானது பிணையுறுதியாக வழங்கப்படும் போது கார்பன் செறிவுமிக்கச் சொத்துக்களின் விலைமதிப்பீட்டை குறைக்கும் “காலநிலைசார் காரணி” ஒன்றினை அறிமுகப்படுத்தியதன் மூலம் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தும் அதன் சொத்துப்பட்டியல் பெறுமதியை காலநிலையுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளுக்கெதிராக பாதுகாப்பதற்காக திட்டமிட்டுள்ளது. மேலும், நிலைப்பெறுந்தன்மை தொடர்புடைய முறிகளை நோக்கிய சொத்து உடைமைகளில் உபாயரீதியான மாற்றமொன்று நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் குறிப்பிடத்தக்களவு கார்பன் சுவடுகளைக் கொண்ட முறிகளிலிருந்து விலகி இழத்தல் என்பவற்றுடன் சேர்த்து ஐரோப்பிய மத்திய வங்கியின் பிணையுறுதிக் கட்டமைப்பிற்குள் கார்பன் செறிவுமிக்கச் சொத்துக்களுக்கான கண்டிப்பான உச்சக் குறைப்பு தேவைப்படுத்தல் பிரயோகிக்கப்படும்.

### பசுமை நிலைமாற்றத்தினை ஆதரவளிப்பதில் நாணயக் கொள்கைக்கான சவால்கள்

தாழ்ந்தளவிலானதும் நிலையானதுமான பணவீக்கத்தை அடையும் அதன் பொறுப்பாணைக்கு அப்பால், மத்திய

வங்கிகள் பசுமை பொருளாதாரமொன்றினை நோக்கி நிலைமாற்றமடைவதை முனைப்புடன் ஆதரவளிப்பதற்காக நாணயக் கொள்கை தொழிற்பாடுகளுள் காலநிலைசார் கரிசனைகளைக் கூட்டிணைக்கலாம். இந்நோக்கில், சூழல் ரீதியில் நிலைப்பெறுந்தன்மையுடைய துறைகளுக்கான கடன்பெறுதலுக்கான செலவைக் குறைக்கும் வகையிலும், கார்பன் செறிவுமிக்க துறைகளுக்கான கடன்பெறுதலுக்கான செலவை அதிகரிக்கும் வகையிலும் நாணயக் கொள்கை கருவிகள் வடிவமைக்கப்படலாம். உதாரணமாக, மத்திய வங்கிகள் (எடுத்துக்காட்டாக சீனா) குறைந்தபட்ச ஒதுக்கு தேவைப்பாட்டினை நிர்ணயிக்கும் போது, காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு காரணிகளையும் கவனத்திற்கொள்கின்றன. ஹங்கேரி மத்திய வங்கியான மேஜார் நெம்செத்தி வங்கியானது திட்டவட்டமான நியதிச்சட்ட பசுமை பொறுப்பாணையொன்றினைக் கொண்டுள்ளது. நாணயக் கொள்கை தொழிற்பாடுகளில் பிணையுறுதியாக பயன்படுத்தப்படும் தகைமையுடைய பசுமைச் சொத்துகளுக்கு பொருந்தத்தக்க சதவீதக் குறைப்பு மீதான குறிப்பிடத்தக்க உச்சவரம்பு கழிவுகளை அவ்வங்கி வழங்குகின்றது. மேலும், பல மத்திய வங்கிகள் அவற்றின் நாணயக் கொள்கை தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பசுமைக் கடன்வழங்கல் தொழிற்பாடுகளுக்கு ஏற்றதாக்கிக்கொண்டுள்ளன (சீனா, மலேசியா, யப்பான் மற்றும் ஹங்கேரி). அத்தகைய வழிமுறைகள் கார்பன் செறிவுமிக்க முதலீடுகளிலிருந்து விடுபட்டு, பசுமையான முதலீடுகளை நோக்கிய நிதியியல் வளங்களை மீள் ஒதுக்கீடு செய்வதற்கு முனைப்புடன் ஊக்குவித்து, இதன் மூலம் காலநிலைசார் நிலைமாற்ற குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்கின்றன.

எவ்வாறாயினும், மத்திய வங்கியின் மையப் பொறுப்பாணைக்கும் காலநிலைசார் முன்முயற்சிக்குமிடையில் சமநிலையை வேறுபடுத்துவதென்பது நாணயக் கொள்கை தொழிற்பாடுகளினூடாக பசுமைகளின் நிலைமாற்றத்திற்கு ஆதரவளிப்பதனை நாடும் மத்திய வங்கிகளுக்கு மிக முக்கியமான சவாலொன்றாகவிருக்கலாம் (நிதியியல் முறைமையை பசுமையாக்குவதற்கான வலையமைப்பு, 2026). அதேவேளை, நாணயக் கொள்கை தொழிற்பாடுகள், பிணையுறுதிக் கட்டமைப்புக்கள் மற்றும் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றினை பசுமையாக்குதலானது துல்லியமான மற்றும் காலந்தவறாத தரவுகள், வலுவான தொழில்நுட்ப இயலளவுகள் அத்துடன் காலநிலைசார் இடர்நேர்வு மதிப்பீட்டு நுட்பங்கள் மற்றும் முறையியல் என்பவற்றை தேவைப்படுத்துவதனால் நாணயக் கொள்கையின் தொழிற்பாட்டுச் சிக்கல்தன்மையை மேலும் அதிகரிக்கக்கூடும். மேலும், பேரண்டப்பொருளாதார கரிசனைகளுக்கு பதிலாக கொடுகடன் ஒதுக்கீடு சூழலியல் இலக்குகளால் முதன்மையாக நெறிப்படுத்தப்படும்போது, அத்தகைய வழிமுறைகள் நாணயக் கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறைகளில் செல்வாக்குச் செலுத்தலாம். நிதியியல் நிறுவனங்களின் நோக்கில், காலநிலையுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மற்றும் இடர்நேர்வு மதிப்பீடுகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட உயர்ந்தளவிலான இணங்குவித்தல் மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் என்பன மேலதிக ஒழுங்குமுறைப்படுத்தல் சுமையொன்றாக அமையக்கூடும். அதேவேளை, சூழல்சார் நிலைப்பெறுந்தன்மையுடைய துறைகளுக்கு விரும்பி முன்னுரிமையளித்தல் துறைகளுக்கு இடையேயான போட்டித்தன்மையை சமநிலையற்றத்தன்மைக்கு வழிவகுத்து, விசேடமாக, நிலைபேறான நிதியளிப்பு வகைப்படுத்தல்கள் தெளிவற்றதாகவோ அல்லது சீரற்ற தன்மையிலோ பிரயோகிக்கப்படுமிடத்து, எதிர்பாராத சாத்தியமான சந்தைத் திரிவுபடுத்தல்களை ஏற்படுத்தும். எனவே, மத்திய வங்கிகள் நடைமுறைக்குப் பொருத்தமான, கொள்கை செயற்திறன், நிதியியல் முறைமை வினைத்திறன் மற்றும் சந்தை நடுநிலை என்பவற்றிற்கான சாத்தியமான இடர்நேர்வுகளுக்கெதிராக பசுமை குறிக்கோள்களை கவனமாக சமநிலைப்படுத்துவது அவசியமானதாகும்.

### முடிவுரை

தொடர்ச்சியாக அதிகரித்தும் தீவிரமடைந்தும் வரும் காலநிலையினால் தூண்டப்பட்ட இயற்கை அனர்த்தங்கள் மற்றும் துரிதமான சுற்றாடல்சார் சீர்குலைவு அதேபோன்று குறைந்தளவிலான கார்பன் நிலைமாற்றக் கொள்கையினை அதிகரித்தளவில் பின்பற்றுதல் போன்ற பின்னணியில், நாணயக் கொள்கை வகுப்பிலும் தொழிற்பாட்டிலும் காலநிலை மாற்றம் தொடர்பான கரிசனைகளைக் கூட்டிணைப்பதற்கு மத்திய வங்கிகள் அதிகரித்தளவில் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. நாணயக் கொள்கையை நடாத்துவதற்கு பணவீக்கம், பொருளாதார வளர்ச்சி, கொள்கை ஊடுகடத்தல்

வழிகள் மற்றும் நிதியியல் உறுதிப்பாடு என்பன மீதான அவற்றின் தாக்கத்தினூடாக காலநிலை மாற்றம் மற்றும் நிலைமாறுதலடையும் கொள்கைகள் பல்வேறு சவால்களை தோற்றுவிக்கின்றன. இச்சவால்கள் தீவிரமான காலநிலை நிலைமைகளின் நேரியல்சாரா விளைவுகளினாலும், காலநிலை மாற்றம் மற்றும் குறைந்தளவிலான காா்பன் நிலைமாற்றக் கொள்கைகள் என்பவற்றிலிருந்து எழுகின்ற கட்டமைப்புசாா் நிலைமாற்றங்களினாலும் தீவிரப்படுத்தப்பட்டு, கொள்கைசாா் வழுக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்துள்ளன.

எனவே, மத்திய வங்கிகள் மரபுசாா்ந்த பேரண்டப்பொருளாதார கரிசனைகளுக்கு அப்பாற்சென்று, ஒட்டுமொத்த விலை மட்டங்கள், சாா்பு விலைகள், பொருளாதார நடவடிக்கைகள் அதேபோன்று நுகா்வு, சேமிப்பு மற்றும் முதலீட்டுப் போக்குகள் என்பவற்றில் காலநிலை தணித்தல் மற்றும் ஏற்றதாக்கிக்கொள்ளுதல் கொள்கைகள் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றனவென்பதை ஆராய வேண்டியிருக்கலாம். இந்நோக்கத்திற்காக, வானிலையுடன் தொடா்புடைய தரவுகள் உள்ளடங்கலாக பரந்தளவிலான குறிகாட்டிகளை கண்காணிப்பதற்கு மத்திய வங்கிகள் தேவைப்படுத்தப்படலாம். மேலும், காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை நிலைமாற்றம் என்பவற்றின் விளைவுகளை, குறிப்பாக பசுமைப் பொருளாதாரமொன்றை நோக்கிய நிலைமாற்றத்துடன் தொடா்புடைய துரிதமான தொழில்நுட்ப மாற்றங்களுக்கு மத்தியில் சிறப்பாக பற்றிக்கொள்ளும் வகையில், ஏற்கனவேயுள்ள பேரண்டப்பொருளாதார மாதிரிகளை மத்திய வங்கிகள் மீளச் சிந்திக்க வேண்டியிருக்கலாம். காலநிலைசாா் இடா்நோ்வுகள் நாணயக் கொள்கைசாா் தொழிற்பாடுகளில் பயன்படுத்தப்படும் சொத்துப்பட்டியலின் பெறுமதியிலும் இடா்நோ்வுத் தோற்றப்பாட்டிலும் செல்வாக்கு செலுத்துவதால், பிணையுறுதித் தகைமை, சொத்துக் கொள்வனவு கட்டமைப்புக்கள் மற்றும் இடா்நோ்வு முகாமைத்துவ நடைமுறைகள் என்பவற்றினை மத்திய வங்கிகள் மீள்மதிப்பீடு செய்வது மிக முக்கியமானதாகும். ஒட்டுமொத்தமாக, பேரண்டப்பொருளாதார உறுதித்தன்மையை பாதுகாப்பதற்காக காலநிலையுடன் தொடா்புடைய இடா்நோ்வுகளையும் கரிசனைகளையும் உள்ளடக்குவதற்காக அதன் நோக்கெல்லையை விரிவுப்படுத்துவதனூடாக நாணயக் கொள்கை நடாத்தப்படுவதை மீள்வரைவிலக்கணம் செய்வதற்கு மத்திய வங்கிகள் நிா்பந்திக்கப்பட்டுள்ளன.

**உசாத்துணைகள்**


Academy of Disaster Reduction and Emergency Management. (2022). 2021 Global Natural Disaster Assessment Report. ReliefWeb. Retrieved from

https://reliefweb.int/report/world/2021-global-natural-disaster-assessment-report

Asian Development Bank. (2021). Climate Risk Country Profile : Sri Lanka. Manila, Phillipines: World Bank Group.

Lane, T. (2024). Monetray Policy and Climate Change: Distinguishing Between a Protective and Proactive Agenda. Zurich: Coincil on Economic Policies.

Network for Greening the Financial System. (2020). Climate Change and Monetary Policy: Initial takeaways. Paris: NGFS Secretariat/Banque de France.

Network for Greening the Financial System. (2026). Greening Monetary Policy Operations: Exploring Additional Options. Paris: Network for Greening the Financial System.

Thomas, V., Albert, J., & Hepburn, C. (2014). Contributors to the frequency of intense climate disasters in Asia-Pacific countries. Climatic Change, 126, 381–398.

doi:https://doi.org/10.1007/s10584-014-1232-y



# இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் மீதான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வையை வலுப்படுத்தல்: நிதியியல் நடவடிக்கைச் செயலணி தரநியமங்களின் பிரயோகம்


**ஏ டி பிரேமதிலக**
மூத்த உதவிப் பணிப்பாளர்
நிதியியல் உளவறிதல் பிரிவு


உரிமம்பெற்ற பணம் மாற்றுநர்கள் உள்ளடங்கலாக மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டமைப்பின் முக்கிய கூறொன்றாக விளங்குகின்றனர். 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களுக்கு அதிகாரமளிப்பது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாகும். வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை நடாத்துவதற்கு முழுமையான அதிகாரத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக உரிமம்பெற்ற வங்கிகள் தொழிற்படுகின்ற அதேவேளை, குறிப்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட நோக்கெல்லையினுள் தொழிற்படுவதற்கு மட்டுப்படுத்தபட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவற்றின் தொழிற்பாடு சார்ந்த நோக்கெல்லை வங்கிகளை விடவும் குறுகியதாகவிருக்கின்ற போதிலும் பொதுமக்களுக்காக, குறிப்பாக சுற்றுலா தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல்களிலும் சிறியளவிலான வெளிநாட்டுச் செலாவணித் தேவைகளிலும் வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தை வசதிப்படுத்துவதில் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். எவ்வாறாயினும், அவர்களின் வியாபாரங்களின் தன்மை குறிப்பாக, அதன் காசு செறிவுமிக்க பண்பு மற்றும் வெளிநாட்டு நாணயத்தைப் பயன்படுத்தும் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுதல் என்பன உட்பொதிந்த பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுகளுக்கு துறையினை ஆட்படச்செய்கின்றது. அதற்கமைய, பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் பற்றிய செயல்திறன்மிக்க மேற்பார்வை இலங்கையின் நிதியியல் முறைமையின் நேர்மையினைப் பாதுகாப்பதற்கு அத்தியாவசியமானதாக விளங்குகின்றது.

## சர்வதேச தரநியமங்களும் இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறையும்

உலகளாவிய பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தலுக்கான தரநியமங்களை பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை முறியடிப்பதற்குமான கொள்கைகளையும் உருவாக்குகின்ற அரசாங்கங்களுக்கு இடையிலான அமைப்பொன்றான நிதியியல் நடவடிக்கைச் செயலணி நிர்ணயிக்கின்றது. நடவடிக்கைச் செயலணியின் 40 பரிந்துரைகளும் பாதுகாப்பு வழிமுறைகளைத் தாபித்தல், மேற்பார்வைப் பொறிமுறைகள், அமுலாக்க நடவடிக்கைகள் அத்துடன் பன்னாட்டு ஒத்துழைப்பு என்பவற்றுக்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டமைப்பினை ஏற்பாடு செய்கின்றன.

நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் கட்டமைப்பின் மூலைக்கல் இடர்நேர்வு அடிப்படையில் அமைந்த அணுகுமுறையாகும். பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளப்படுத்தி, மதிப்பிட்டு புரிந்துகொள்வதற்கும் அவ்விடர்நேர்வுகளுக்கு மூலவளங்களை விகிதசமமாக ஒதுக்கீடு செய்வதற்கும் நாடுகளையும் மேற்பார்வை அதிகாரிகளையும் இது வேண்டுகின்றது. நடைமுறையில் இதன் அர்த்தம், மேற்பார்வை கவனம்செலுத்தலானது உயர்வான இடர்நேர்வுகளைக் கொண்ட நிறுவனங்கள் அல்லது நடவடிக்கைகளை நோக்கி மிகத் தீவிரமாக திசைப்படுத்தப்பட்டுள்ளது என்பதாகும்.

மட்டுப்படுத்தப்பட்ட வணிகர் விடயத்தில் இடர்நேர்வுக் காரணிகள் என்பது காசுக் கொடுக்கல்வாங்கல்களின் உயர்வான அளவுகள், எல்லை கடந்த காசுப் பாய்ச்சல்களுக்கு உட்படுதல், மட்டுப்படுத்தப்பட்ட அடையாள ஆவணத்துடன்கூடிய வாடிக்கையாளர்கள், உயர் இடர்நேர்வுமிக்க ஆள்புலங்களுடனான வணிகங்கள், அரசியல் ரீதியாக முகங்கொடுக்கின்ற ஆட்களை ஈடுபடுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்கள் போன்றவற்றை உள்ளடக்கலாம். இடர்நேர்வு மதிப்பீட்டுக் கருவிகள், கொடுக்கல்வாங்கல் தரவுகள் மற்றும் தளத்திலான பரிசோதனைகள், கருப்பொருள்சார் மீளாய்வுகள் மற்றும் பின்தொடர் பரீட்சிப்புக்கள் என்பவற்றை முன்னுரிமைப்படுத்துவதற்கு தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டிலிருந்து கண்டறியப்பட்டவைகளை மேற்பார்வையாளர்கள் பயன்படுத்துகின்றனர்.

### மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் தொடர்பில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தலின் மையக் கடப்பாடுகள்

மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களை மேற்பார்வை செய்தலானது நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பரிந்துரைகளுடன் அணிசேர்ந்துள்ள பல முக்கிய தடுப்பு வழிமுறைகள் மீது கவனம்செலுத்துகின்றது.

### 1. வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்

வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம் என்பது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு முன்னர் தமது வாடிக்கையாளர்களை முறையாக அடையாளப்படுத்தி, உறுதிப்படுத்தும் பொருட்டு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களை வேண்டுகின்ற அடிப்படைக் கட்டுப்பாடொன்றாகும். நம்பகமான அடையாள ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளுதல், கொடுக்கல்வாங்கலின் நோக்கத்தை அறிந்துகொள்ளுதல் அத்துடன் கொடுக்கல்வாங்கல் வாடிக்கையாளரின் முகக்குறிப்புடன் ஒத்திசைவாகவுள்ளது என்பதைக் கணிப்பிடுதல் ஆகியவற்றை இது உள்ளடக்குகின்றது.

அரசியல் ரீதியான முகங்கொடுக்கும் ஆட்கள், உயர் பெறுமதி கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அதிக இடர்நேர்வு கொண்ட ஆள்புலங்களை ஈடுபடுத்துகின்ற வணிகங்கள் என்பவற்றுக்காக குறிப்பாக, உயர்வான இடர்நேர்வுகள் அடையாளம் காணப்படுகின்றவிடத்து மேம்பட்ட உரிய விழிப்புக்கவனம் பிரயோகிக்கப்பட வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன நடைமுறைகளை ஒத்திசைவாக பிரயோகிக்கின்றனரா, செம்மையான ஆவணப்படுத்தலைப் பேணுகின்றனரா மற்றும் அவசியமானவிடத்து வாடிக்கையாளர் தகவல்களை இற்றைப்படுத்துகின்றனரா என்பதனை மேற்பார்வைப் பரீட்சிப்புக்கள் மதிப்பிடுகின்றன.

### 2. பதிவு பேணுதலும் கணக்காய்வுப் பரீட்சிப்புக்களும்

முறையான பதிவு பேணுதலானது ஒழுங்குமுறைப்படுத்தல் மீளாய்வுகள் மற்றும் விசாரணைகள் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய மீட்டெடுப்புக்களை இயலச்செய்கின்றன. வாடிக்கையாளர் அடையாளம், கொடுக்கல் வாங்கல் விபரங்கள் என்பவற்றை விதித்துரைக்கப்பட்ட தக்கவைத்தல் காலப்பகுதிக்காக உரிய விழிப்புக்கவன வழிமுறைகள் பற்றிய பதிவுகளைப் பேணுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் வேண்டப்பட்டுள்ளனர்.

பதிவுகள் முழுமையானவையா, செம்மையானவையா, மீட்டெடுக்கப்படத்தக்கவையா அத்துடன் பாதுகாப்பாகப் பேணப்படுகின்றனவா என்பதனை மேற்பார்வையாளர்கள் மதிப்பிடுகின்றனர். வலுவான ஆவணப்படுத்தலானது நடைமுறைகள் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்தி சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் பற்றி புலனாய்வு

செய்கின்ற போது சட்ட அமுலாக்கல் மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவு போன்றவற்றின் பணிக்கு துணையளிக்கின்றன.

3. சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல்

சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை உரிய நேரத்தில் அறிக்கையிடுதல் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் கட்டமைப்பின் மையமாக விளங்குகின்றது. அடிப்படை அளவுகளை அறிக்கையிடுவதைத் தவிர்ப்பதற்கு கொடுக்கல்வாங்கல்களைக் கட்டமைத்தல், விளக்கமளிக்காத உயர்பெறுமதி நாணயப் பரிமாற்றங்கள், வாடிக்கையாளரின் அறிந்த முகக்குறிப்புடன் கொடுக்கல்வாங்கல்கள் ஒத்திசைவின்மை போன்ற வழமைக்குமாறான அல்லது சந்தேகத்திற்கிடமான போக்குகளை இனங்கண்டு அத்துடன் அவற்றை உடனடியாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் வேண்டப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளின் உரியகாலத் தன்மை மற்றும் தரம் என்ற இரண்டையும் மேற்பார்வை மீளாய்வுகள் மதிப்பிடுகின்றன. அபாயகரமான செயற்பாடுகளைக் கண்டுபிடித்து கரிசனைகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் உள்ளக ரீதியாக அடையாளப்படுத்துவதற்கு அலுவலர்கள் போதுமானளவிற்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர் என்பதனை நிறுவனங்கள் எடுத்துக்காட்ட வேண்டும்.

4. பயன்பெறு சொத்தாண்மையின் வெளிப்படைத்தன்மை

வாடிக்கையாளர்கள் கூட்டு நிறுவனங்களாக இருக்கின்ற அல்லது சிக்கலான கட்டமைப்புக்கள் ஊடாகத் தொழிற்படுகின்றவிடத்து, மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் இறுதிப் பயன்பெறு உடமையாளர்களை இனங்கண்டு உறுதிப்படுத்த வேண்டும். கொடுக்கல்வாங்கல் ஒன்றை இறுதியாகக் கட்டுப்படுத்துகின்ற அல்லது அதிலிருந்து பயன்பெறுகின்ற தனிப்பட்டவர்களை இனங்காண்பதற்குத் தவறுதலானது பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் நோக்கங்களுக்காக சட்ட ரீதியான கட்டமைப்புக்களின் தவறான பயன்பாட்டுக்கு இயலச்செய்யக்கூடும்.

சொத்தாண்மையில் அல்லது கட்டுப்பாட்டில் மாற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் போதுமான சொத்தாண்மைத் தகவல்களை சேகரித்து இற்றைப்படுத்தப்பட்ட பதிவுகளைப் பேணி தொடர்ச்சியான கண்காணித்தலை நடத்துகின்றனரா என்பதனை மேற்பார்வையாளர்கள் பரீட்சிப்பர்.

5. உள்ளகக் கட்டுப்பாடுகளும் இணங்குவித்தல் தொழிற்பாடும்

செயல்திறன்மிக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் இணங்குவித்தலானது நடைமுறைசார் பரிசோதனை விடயங்களுக்கும் மேலானவற்றை வேண்டுகின்றது. அவர்களது இடர்நேர்வு விபரக்குறிப்பு தயாரித்தலுக்கு தேவைக்கேற்றவாறான உள்ளகக் கொள்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளை மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் தாபிக்க வேண்டும். இணங்குவித்தல் அலுவலர் ஒருவரை நியமித்தல், நிறுவனசார் இடர்நேர்வுக் கணிப்பீடுகளை நடாத்துதல், கொடுக்கல்வாங்கல் கண்காணிப்புப் பொறிமுறைகள் மற்றும் அலுவலர்களுக்கு கிரமமாகப் பயிற்சியளித்தல் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் தொழிற்பாடுகளின் அளவு மற்றும் சிக்கல்வாய்ந்த தன்மை என்பவற்றுக்கு உள்ளகக் கட்டுப்பாடுகள் விகிதசமமானவையா அத்துடன் குறைபாடுகள் இனங்காணப்படுகின்ற போது சீராக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பதனை மேற்பார்வை மதிப்பீடுகள் பரிசீலனையில் கொள்கின்றன.

## மேற்பார்வை மற்றும் அமுலாக்கல் கட்டமைப்பு

பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் சட்டக் கட்டமைப்பின் கீழ் பரீட்சிப்புக்களை நடாத்துவதற்கும் அவசியமானவிடத்து அமுலாக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மேற்பார்வை அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இணங்குவித்தல் மட்டங்களைக் கணிப்பதற்கும் மேற்பாட்டுக்கான துறைகளை இனங்காண்பதற்கும் தளத்திலான பரீட்சிப்புக்கள்,

தளத்திற்கப்பாலான கண்காணித்தல், பின்தொடர் மீளாய்வுகள் மற்றும் கருப்பொருள்சார் பரிசோதனைகள் என்பன நடாத்தப்படுகின்றன.

குறைபாடுகள் கண்டுபிடிக்கப்படுகின்றவிடத்து மேற்பார்வை அதிகாரிகள் எச்சரிக்கைக் கடிதங்களை, பணிப்புரைகளை வழங்கலாம் அல்லது விகிதசம மற்றும் தடைகளை விதிக்கலாம். அமுலாக்க வழிமுறைகள் சீராக்க அறிவுறுத்தல்கள் மற்றும் நிருவாக ரீதியான தண்டப்பணங்கள் தொடக்கம் கடுமையான இணங்காமை விடயத்தில் அதிகாரமளித்தலை இடைநிறுத்துதல் அல்லது இரத்துச்செய்தல் வரையான வீச்சு காணப்படலாம்.

அமுலாக்கல் குறிக்கோள் வெறுமனே தண்டணை விதிப்பதல்ல ஆனால் அது இனங்காணப்பட்ட பலவீனங்களுக்கு உடனடியாகத் தீர்வுகாணப்படுகின்றன என்றும் பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தலில் பாதிக்கப்படும் தன்மைகளைக் குறைப்பதற்கு முறைமைசார் மேம்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்றும் சீராக்க ரீதியான உறுதிசெய்தலாகும்.

### தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2024/2025 - துறைசார் இடர்நேர்வுத் தொகுப்பு

2024/2025 ஆண்டிற்கான தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டு இற்றைப்படுத்தலானது மட்டுப்படுத்தப்பட்ட வணிகர் துறையை நடுத்தர - குறைவான பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வொன்றைக் கொண்டதாக வகைப்படுத்துகின்றது. இத்தரப்படுத்தல் உட்பொதிந்த பாதிக்கப்படும் தன்மைகளையும் தற்போது செயற்பாட்டிலுள்ள தணிப்புக் கட்டுப்பாடுகள் இரண்டினையும் பிரதிபலிக்கின்றது.

உட்பொதிந்த இடர்நேர்வுகளானவை காசு அடிப்படையிலமைந்த தொழிற்பாடுகளின் தன்மை, வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள், எல்லைகடந்த இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை மற்றும் சில விடயங்களில் கொடுக்கல்வாங்கல்களை கண்காணித்தல் இயலளவுகளைப் பாதிக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு என்பவற்றிலிருந்து முதன்மையாகத் தோற்றம்பெறுகின்றன.

எனினும், துறைசார் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினையும் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு அங்கீகரிக்கின்றது. அதிகரிக்கின்ற மேற்பார்வை ஈடுபாடு, அதிகரித்த தளத்திலான பரிசோதனைகள், மேற்பார்வைப் பணிப்புரைகளை வழங்குதல் மற்றும் சீராக்க நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண்காணித்தல் என்பன துறை முழுவதும் மேம்பட்ட இணங்குவித்தலுக்குப் பங்களித்துள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் உரிய விழிப்புக்கவன நடைமுறைகள், தடைப் பரிசோதனைப் பொறிமுறைகள், பதிவுபேணும் நடைமுறைகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் தரம் என்பவற்றை வலுப்படுத்தியுள்ளனர்.

கூட்டாக, இவ்வழிமுறைகள் எஞ்சியிருக்கின்ற பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுகளைக் குறைத்து, நடுத்தர-குறைவான மட்டத்தில் துறை வகைப்படுத்துவதற்கு ஆதரவளித்துள்ளன.

### முன்னோக்கிய பாதை

முன்னோக்கி நோக்குகையில், மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் பற்றிய பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் மேற்பார்வை தோற்றம்பெற்றுவருகின்ற இடர்நேர்வுகள் மற்றும் சர்வதேச அபிவிருத்திகள் என்பவற்றுக்குச் செவிசாய்த்து, தொடர்ந்தும் படிப்படியாக வளர்ச்சியடையும் இடர்நேர்வு அடிப்படையிலமைந்த அணுகுமுறையை வலுப்படுத்தலானது தரவுப் பகுப்பாய்வுகள் மீது மிகுந்தளவில் தங்கியிருத்தல், இலக்கிடப்பட்ட கருப்பொருள் சார் பரிசோதனைகள், செலூக்கமிக்க மேற்பார்வை ஈடுபாடு என்பவற்றுடன் முக்கிய முன்னுரிமையொன்றாக விளங்குகின்றது.

நிறுவனசார் இடர்நேர்வு மதிப்பீடு, அரசியல் ரீதியாக முகங்கொடுக்கின்ற ஆட்களை அடையாளப்படுத்தும் செயன்முறை, தடை பரிசோதிப்பதில் அத்துடன் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் பற்றிய அறிக்கை சமர்ப்பித்தலின் தரம் என்பவற்றில் மேலதிக மேம்படுத்தல்கள் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரிக்கும். தொடர்ச்சியான பயிற்சியளித்தலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களினுள் இயலளவைக் கட்டியெழுப்புவதற்குத் துணையளித்து, பரிணாம வளர்ச்சியடைகின்ற பணம் தூயதாக்குதல் மற்றும்

பயங்கரவாத நிதியளித்தல் வகைகள் பற்றி அலுவலர்கள் விழிப்புடன் இருப்பதனை உறுதிசெய்யும்.

நிதியியல் நடவடிக்கைச் செயலணித் தரநியமங்களுடன் மேற்பார்வை நடைமுறைகளை அணிசேரச் செய்தல் மற்றும் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு நுண்நோக்குகளிலிருந்து அனுகூலமடைதல் மூலம் இலங்கை வெளிப்படையான மற்றும் நன்கு ஒழுங்குமுறைப்படுத்தப்படும் வெளிநாட்டுச் செலாவணித் துறையினைப் பேணுவதற்கான அதன் கடமைப்பொறுப்பினை மீள வலிமைப்படுத்துகின்றது. செயல்திறன் மிக்க மேற்பார்வையானது பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுகளைத் தணிப்பது மாத்திரமன்றி பொதுமக்கள் நம்பிக்கையை வலுப்படுத்தி, நிதியியல் உறுதிப்பாட்டை ஊக்குவித்து தேசிய நிதியியல் முறைமையின் நேர்மையினையும் பாதுகாக்கின்றது.

**உசாத்துணைகள்**


The FATF Recommendations: International Standards on Combating Money Laundering and the Financing of Terrorism & Proliferation.

Foreign Exchange Act, No. 12 of 2017.

Financial Transactions Reporting Act, No. 6 of 2006.

National Risk Assessment on Money Laundering and Terrorist Financing – 2021/2022.



# திறந்த வங்கித்தொழில் – டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வங்கித்தொழிலில் முன்மாதிரிமிக்க மாற்றம்

**எம் பீ எம் சர்ஜுன்**
பிரதிப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

## 1. அறிமுகம்

ஏனைய பல தொழிற்றுறைகளைப் போன்று வங்கித்தொழில் துறையானது உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் தொழில்நுட்பத்தினைப் பெருமளவில் சார்ந்திருக்கின்ற நிலையொன்றினை எட்டியுள்ளது. இம்மாற்றத்திற்கான முக்கிய உந்துசக்தியாக “டிஜிட்டல்மயமாக்கல்” காணப்படுவதுடன் இது சமூக மற்றும் நிறுவனத் துறைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துகின்ற சமூக-தொழில்நுட்ப ரீதியிலான செயன்முறையொன்றாகும் (Eaton, Hallingby, Nesse, & Hanseth, 2014). இருப்பினும், 1960களில் வங்கிகள் வாடிக்கையாளர் கணக்குகளை இலத்திரனியல் முறையில் பேணுவதற்குத் தொடங்கிய காலத்திலிருந்தே வங்கிகள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வருவதனால் டிஜிட்டல் தொழில்நுட்பமானது உலகளாவிய வங்கித்தொழில் துறைக்குப் புதியதொரு நிகழ்வாகக் காணப்படுவதில்லை. 1970களில் பங்குச் சந்தைகள் (NASDAQ) இலத்திரனியல் ரீதியிலான வர்த்தகத்தை அறிமுகப்படுத்திய வேளையிலும் பின்னர் SWIFT முறைமையின் ஊடாக உலகளாவிய தொடர்பாடல் வலையமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையிலும் மேலதிக டிஜிட்டல் மயமாக்கல் நிகழ்ந்தது (Forester, 1985). இருப்பினும், வங்கித்தொழில் வியாபாரம் உள்ளடங்கலாக நிதியியல் சேவைகளின் டிஜிட்டல்மயமாக்கலில் உண்மையான ‘முன்மாதிரிமிக்கதொரு மாற்றமானது’ வாடிக்கையாளர் கணக்குகள் அல்லது பங்குச் சந்தை அல்லது தொடர்பாடல் ஆகியவற்றின் சாதாரண டிஜிட்டல்மயமாக்கலிலும் பார்க்க மேம்பட்ட மட்டமொன்றினை நோக்கி நகர்கின்றது. இது நிதியியல் சேவை வழங்குதல் மற்றும் வியாபார மாதிரி வடிவமைப்பு ஆகியவற்றிற்குள் டிஜிட்டல்மயமாக்கலினை ஆழமாக உட்பொதித்து இணைப்பதன் மூலம் (Kazan, Tan, Lim, Sørensen, & Damsgaard, 2018) நிதியியல் தொழிற்றுறையினை அடிப்படையாக மாற்றியமைக்கும் மட்டமொன்றாகும் (Currie, & Lagoarde-Segot, 2017). அதற்கமைய, திறந்த வங்கித்தொழில் மற்றும் செயலிச் செயல்நிரலாக்க இடைமுகத்தின் (API) அடிப்படைத் தொழில்நுட்பம் மற்றும் திறந்த வங்கித்தொழிலினை அறிமுகப்படுத்துவதற்கான இலங்கையின் தயார்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் “டிஜிட்டல்மயமாக்கப்பட்ட வங்கித்தொழிலில் முன்மாதிரிமிக்கதொரு மாற்றத்திற்கான” சமகால உதாரணங்களில் ஒன்றை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

## 2. திறந்த வங்கித்தொழில் என்றால் என்ன?

திறந்த வங்கித்தொழிலானது செயலி இடைமுகங்கள் மற்றும் பாதுகாப்புசார் விவரக்குறிப்புக்கள் என்பவற்றின் தொகுதியொன்றினால் ஆளுகைக்குட்படுத்தப்படுகின்ற நிதியியல் சுற்றுச்சூழலமைப்பின் விசேட வகையொன்றாகக் காணப்படுகின்றது. இது மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்திற்கும் தொழிற்பாடுகளுக்கும் ஏதுவாக, மூன்றாம் தரப்புச் செயலி உருவாக்குநர்கள் திறந்த செயலிச்

செயல்நிரலாக்க இடைமுகங்களின் மூலம் செயலிகளினை உருவாக்குவதற்கு மற்றும் கட்டியெழுப்புவதற்கு அனுமதிக்கின்ற வங்கித்தொழில் மாதிரியொன்றாகக் காணப்படுகின்றது. திறந்த வங்கித்தொழிலின் எண்ணக்கரு மற்றும் செயலிச் செயல்நிரலாக்க இடைமுகத்தின் அடிப்படைத் தொழில்நுட்பம் ஆகியன ஊடுருவுவதற்கு முடியாததும் தெளிவற்றதுமான வங்கித்தொழில் வியாபார மாதிரியினைப் புதிய திறந்த மற்றும் வெளிப்படையான நிதியியல் சுற்றுச்சூழலமைப்பொன்றாக மாற்றுகின்றன. இது பங்கேற்பாளர்களுக்குச் சிறந்த தெரிவுகளையும் தகவல்களையும் வழங்கி, அச்சுற்றுச்சூழலமைப்பினுள் நிதியங்களினை நகர்த்துவதற்கு அவர்களை இயலச்செய்கின்றது. கியுபாட் (2016) குறிப்பிட்டவாறு, சேவை வழங்குகின்ற இயலளவுகள் மற்றும் மூலத் தரவுகள் தொடர்பான தமது பெறுமதிமிக்க முன்மொழிவுகளினை மீள்வரையறைசெய்வதற்குத் திறந்த வங்கித்தொழிலானது வங்கிகளினை இயலச்செய்கின்றது. இது தனிப்பட்ட வாடிக்கையாளர்களும் வியாபாரங்களும் தமது தரவுகளினை ஏனைய வங்கிகள் உட்பட மூன்றாம் தரப்பினருடன் பாதுகாப்பானதொரு முறையில் பகிர்ந்துகொள்வதற்கும் அவர்களது வங்கியினைப் பயன்படுத்தாமலேயே அவர்களது வங்கிக் கணக்குகளினை முகாமைசெய்வதற்கும் அதிகாரமளிக்கின்றது (திறந்த வங்கித்தொழில், 2017). கடன்பாட்டாளர்கள் பற்றிய அனைத்தையுமுள்ளடக்கிய தரவுகளைக் கடன்வழங்குநர்கள் அணுகுவதனைத் திறந்த வங்கித்தொழில் இயலச்செய்து அதன்மூலம், கொடுகடன் இடர்நேர்வினை மிகவும் துல்லியமாக மதிப்பிடுவதனை வசதிப்படுத்தி, கிட்டத்தட்ட முழுமையான தகவல்களுடன் உயர்ந்தளவிலான இடர்நேர்வு மற்றும் குறைந்தளவிலான இடர்நேர்வு கொண்ட கடன்பாட்டாளர்களைத் தெளிவாக வேறுபடுத்துவதன் மூலம் பாதகமான தெரிவுச் சிக்கல் ஏற்படுவதைத் தணிக்கின்றது. நவீன நிதியியல் உலகமானது திறந்த வங்கித்தொழிலை ஏதேனுமொரு வடிவில் வழங்குகின்றது. யப்பான், சிங்கப்பூர், மலேசியா, இந்தியா மற்றும் பெரும்பாலான ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் திறந்த வங்கித்தொழிலினை நோக்கிக் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றத்தினை அடைந்துள்ளன. இருப்பினும், கிம், வாங், ஜே, ஜுன் மற்றும் வான் (2016) குறிப்பிட்டவாறு, திறந்த வங்கித்தொழிலானது எந்தவொரு வெளியாட்களும் (மூன்றாம் தரப்பினர்) அவர்களது விருப்பத்திற்கமைய ஒரு வங்கியின் முறைமையினை அணுகமுடியுமென்பதனைக் குறிப்பதில்லை. வாடிக்கையாளர் தரவுகளின் பாதுகாப்பினையும் தனியுரிமையினையும் பாதுகாக்கும் பொருட்டு திறந்த வங்கித்தொழிலானது நன்கு மற்றும் பரீட்சிக்கப்பட்ட ஒழுங்குமுறைக் கட்டமைப்பொன்றினுள் பிரயோகிக்கப்படவும் அனுமதிக்கப்படவும் வேண்டும்.

திறந்த வங்கித்தொழிலினை மரபுசார்ந்த வங்கித்தொழில் முறைமையுடன் ஒப்பிடுகையில், மரபுசார்ந்த வங்கித்தொழில் முறைமையொன்றில், வங்கிகள் வைப்புக்களினை ஏற்றல், கடன்வழங்கல் மற்றும் ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. வங்கிகள் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நிதியியல் இடையேற்பாட்டினை வசதிப்படுத்துவதுடன் நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளிலும் பங்கேற்கின்றன. மறுபுறம், நடைமுறையில் ஒரு வங்கியின் வாடிக்கையாளர்கள் ஒன்றிற்கும் மேற்பட்ட நிதியியல் நிறுவனங்களுடன் பொதுவாக இடைத்தொடர்புகளைப் பேணுகின்றனர். ஆனால், மரபுசார்ந்த வங்கித்தொழில் முறைமையின் கீழ் இந்நிறுவனங்களிற்கு இடையில் நிதியங்களினை மாற்றுவது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எளிதானதாகவோ அல்லது வெளிப்படையானதாகவோ காணப்படுவதில்லை. எனவே, வாடிக்கையாளர்கள் வெவ்வேறு வங்கித்தொழில் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகளைத் தகுந்தவாறு தேர்ந்தெடுத்துக்கொள்ளாமல் தமது வங்கிகளினால் வழங்கப்படுகின்ற சேவைத் தொகுதியினையே பொதுவாக ஏற்றுக்கொள்கின்றார்கள். உதாரணமாக, இவ்வேறுபட்ட கணக்குகளிடையே நிதியங்களினை மாற்றுகின்ற போது ஏற்படும் சிரமங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல் சார்ந்த செலவுகள் என்பன காரணமாக ஒரு வாடிக்கையாளர் ஒரு வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றினையும் மற்றொரு வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றினையும் மற்றும் வேறொரு வங்கியில் கடன் அட்டையையும் வைத்திருக்காமல் அதற்குப்பதிலாக, இந்த வசதிகள் அனைத்தையும் ஒரே வங்கியிடமிருந்து

பெற்றுக்கொள்ளக்கூடும் (Farag, Koirala, & McGowan, 2019).

மறுபுறம், திறந்த வங்கித்தொழில் சுற்றுச்சூழலமைப்பு நடைமுறையில் இருக்கின்ற போது, மூன்றாம் தரப்பு நிதியியல் சேவை வழங்குநர்கள் வாடிக்கையாளர்களின் ஒப்புதலுடன் செயலிச் செயல்நிரலாக்க இடைமுகங்களின் மூலம் வங்கிகள் மற்றும் ஏனைய வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிடமிருந்து வாடிக்கையாளர்களின் நிதியியல் தரவுகளை வெளிப்படையாக அணுகுவதற்கு முடியும். ஒத்திசைவான செயலிச் செயல்நிரலாக்க இடைமுகங்களைப் பயன்படுத்தி, சேவை வழங்குகின்ற மென்பொருள் மற்றும் வங்கித்தொழில் இணையவழிச் சேமிப்பகம் (வங்களின் தொகுதி) ஆகிய வடிவங்கள் மூலம் நிதியியல் சேவைகளை திறந்த வங்கித்தொழிலானது வழங்குகின்றது (Laplante, & Kshetri, 2021). ஆதலால், இந்தச் சுற்றுச்சூழலமைப்பின் கீழ் முன்கூட்டியே வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளர் உறவுமுறையோ அல்லது நிதியியல் உற்பத்திகளின் நிரம்பல் சங்கிலிகளோ காணப்படுவதில்லை. மாறாக, வாடிக்கையாளர்கள் தமது விருப்பிற்கேற்ப நிதியியல் நிறுவனங்கள்/கணக்குகளுக்கு இடையில் நிதியங்களை மாற்றுவதன் மூலம் (வரவு மற்றும் செலவு) பல்வேறு கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதுடன் பகுப்பாய்விற்காகத் தகவல்களைத் திரட்டி, கண்காணிப்புக் கருவிகள் மூலம் செயற்பாட்டு வரையறைகளை நிர்ணயிக்கின்றனர் (Laplante, & Kshetri, 2021). இது டிஜிட்டல் கொடுப்பனவுகளுடன் காசுப் பயன்பாடற்ற பொருளாதாரமொன்றினை இயலச்செய்கின்ற போதிலும், வங்கிகள் தமது கட்டுப்பாட்டு எல்லைகளைத் தளர்த்துவதனையும் அதனை அணுகுவதற்கான உரிமையாளரின் அனுமதியுடன் தம்மிடம் கிடைப்பனவாக உள்ள தனியுரிமைத் தரவுகளை மூன்றாம் தரப்பினருடன் பகிர்வதனை எளிமைப்படுத்துவதனையும் இது தேவைப்படுத்துகின்றது. மரபுசார்ந்த வங்கித்தொழில் மாதிரியொன்றுடன் ஒப்பிடுகையில் திறந்த வங்கித்தொழில் சுற்றுச்சூழலமைப்பு பின்வரும் வரைபடம் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

**வரைபடம் 1: வழமையான வங்கித்தொழில் மாதிரி எதிர் திறந்த வங்கித்தொழில் சுற்றுச்சூழலமைப்பு**




மூலம்: லாப்ளேன்ட் மற்றும் சேத்ரி, (2021)

## 3. திறந்த வங்கித்தொழிலிற்கான தேவைப்பாடுகள்

ஒரு நாட்டில் திறந்த வங்கித்தொழிலினை நடைமுறைப்படுத்துவதற்குச் சட்டவாக்கச் சட்டமியற்றல், ஒழுங்குமுறைக் கட்டமைப்புக்கள், உயர் தரத்திலான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு, செயலிச் செயல்நிரலாக்க இடைமுகத் தரநியமங்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நுகர்வோரின் ஒத்துழைப்பு ஆகியவற்றினை இது தேவைப்படுத்துகின்றது. ஐக்கிய இராச்சியமானது 2016இல் திறந்த வங்கித்தொழிலினை நாட்டில் நடைமுறைப்படுத்தியதுடன் பின்வரும் நான்கு மையத் தேவைப்பாடுகளை வரையறுத்து 2018இல் திறந்த வங்கித்தொழில் தரநியமங்களை வெளியிட்டது (திறந்த வங்கித்தொழில் தரநியமங்கள், ஐ.இ., பதிப்பு 3, 2018):

(i) செயலிச் செயல்நிரலாக்க இடைமுகக் குறிப்புக்கள்

(ii) பாதுகாப்புசார் விவரக்குறிப்புக்கள்

(iii) வாடிக்கையாளர் அனுபவ வழிகாட்டல்கள்

(iv) தொழிற்பாட்டு வழிகாட்டல்கள்

செயலிச் செயல்நிரலாக்க இடைமுகக் குறிப்புக்கள் வாசிப்பு/எழுதல் செயலிச் செயல்நிரலாக்க இடைமுகக் குறிப்புக்கள், திறந்த தரவுச் செயலிச் செயல்நிரலாக்க இடைமுகக் குறிப்புக்கள், கோப்பகக் குறிப்புக்கள், இயக்கவாற்றல் வாய்ந்த வாடிக்கையாளர் பதிவு குறிப்புக்கள் அல்லது முகாமைத்துவத் தகவல் அறிக்கையிடல் குறிப்புக்கள் என்பனவாகக் காணப்படலாம். பாதுகாப்புசார் விவரக்குறிப்புக்கள் மூன்றாம் தரப்பினருடனும் செயலிச் செயல்நிரலாக்க இடைமுக வழங்குநருடனும் ஒரே சாதனம் மற்றும் தளத்தில் (மறுவழிப்படுத்தல்) வாடிக்கையாளரின் இடைத்தொடர்புகளினைத் தேவைப்படுத்த கூடும் அல்லது வாடிக்கையாளர் வெவ்வேறு நேரத்தில் வேறுபட்ட தளங்கள்/சாதனத்தில் ஒரு கோரிக்கைக்கு அதிகாரமளிப்பதற்கு (தனிமைப்படுத்தப்பட்ட) அனுமதிக்க கூடும். இப்பாதுகாப்புசார் விவரக்குறிப்புக்கள் நிதியியல் தர செயலிச் செயல்நிரலாக்க இடைமுகங்களிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் வாடிக்கையாளரால் தொடங்கப்படும் பின்தள வழியிலான அங்கீகாரங்களையும் விவரிக்கின்றன. வாடிக்கையாளர் அனுபவ வழிகாட்டல்கள் திறந்த வங்கித்தொழிலுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகள் குறித்த வாடிக்கையாளர் விழிப்புணர்வினை நிச்சயப்படுத்துவதற்காகத் திறந்த வங்கித்தொழிலினால் இயலச்செய்யப்பட்ட செயலி அல்லது இணையத்தளமொன்றில் வாடிக்கையாளர்கள் பின்தொடர வேண்டிய செயன்முறைகளை விளக்குகின்றன. இறுதியாக, தொழிற்பாட்டு வழிகாட்டல்கள் கொடுப்பனவுக் கணக்குச் சேவை வழங்குநர்களிற்கு ஆதரவளிக்கின்றன. அவை போட்டித்தன்மையினையும் புத்துருவாக்கத்தினையும் ஊக்குவிப்பதற்கான பிரத்தியேக இடைமுகமொன்றினை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றன.

## 4. திறந்த வங்கித்தொழிலிற்கான சவால்கள்

நிதியப் பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பாதுகாப்புசார் இடர்நேர்வினை முகாமைசெய்வதும் நற்பெயர்சார் இடர்நேர்வினை முகாமைசெய்வதும் திறந்த வங்கித்தொழில் சூழலமைப்பிற்கான மிக முக்கியமான சவால்களாகக் காணப்படுகின்றன. மேலும், திறந்த வங்கித்தொழிலானது கடுமையான மற்றும் மாற்றமடைந்து வருகின்ற ஒழுங்குமுறைச் சூழலொன்றின் கீழ் தொழிற்பட வேண்டியுள்ளது. எனவே, இவ்விடயம் தொடர்பில் அறிமுகப்படுத்தப்படும் புதிய ஒழுங்குவிதிகளுடன் இணங்கி ஒழுகுவதனை நிச்சயப்படுத்துவதானது வங்கிகளிற்கு அதிக நேரத்தினையும் செலவினையும் ஏற்படுத்தக்கூடியதொரு செயன்முறையாக ஆகிவிடும் (Brodsky, & Oakes, 2017).

திறந்த வங்கித்தொழிலிற்கு ஆதரவளிப்பதற்கான சட்டவாக்கங்களும் ஒழுங்குவிதிகளும் இன்மையானது பல நாடுகளில் திறந்த வங்கித்தொழிலிற்குக் காணப்படுகின்ற மற்றொரு முக்கிய தடையாயுள்ளது. திறந்த வங்கித்தொழிலினை வசதிப்படுத்துவதற்கு யப்பான் அதன் வங்கித்தொழில் சட்டத்தினை 2018இல் திருத்தியமைத்தது. இருப்பினும், நடைமுறைப்படுத்தலானது தன்னார்வமாக மேற்கொள்ளப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவில் திறந்த வங்கித்தொழில் குறித்த ஒழுங்குவிதிகளின்மையானது இணங்குவிப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான சந்தைப்

பங்கேற்பாளர்களிடையே தெளிவின்மையினைத் தோற்றுவித்தது. குறித்த சில நியாயாதிக்கங்களில், உதாரணமாக இந்தியாவில், இடைப்பரிமாற்ற கொடுப்பனவு முறைமை (ஒருங்கிணைந்த கொடுப்பனவு இடைமுகம் – UPI) மற்றும் ஒருங்கிணைந்த டிஜிட்டல் அடையாள அட்டை (ஆதார்) ஆகியவற்றின் நடைமுறைப்படுத்தலின் ஊடாக டிஜிட்டல் உட்கட்டமைப்பு (இந்தியா ஸ்டேக்) மற்றும் திறந்த வங்கித்தொழில் சுற்றுச்சூழலமைப்பினை உருவாக்குவதில் அரசாங்கம் முன்னணி வகிபாகத்தினைக் கொண்டிருந்ததுடன் இது இந்தியாவில் திறந்த வங்கித்தொழிலின் அபிவிருத்திக்கு முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றியது (பின்டெக்நிவ்ஸ், சிங்கப்பூர், 2021).

பாதுகாப்பு மற்றும் தனியுரிமைசார் கரிசனைகள் காரணமாக வாடிக்கையாளர்கள் தமது நிதியியல் மற்றும் தனிப்பட்ட தரவுகளைப் பகிர்ந்துகொள்ளத் தயங்குவதும் திறந்த வங்கித்தொழிலினால் எதிர்கொள்ளப்படுகின்ற மற்றொரு சவாலாகும். ஏனைய வடிவங்களிலான தரவுகளுடன் ஒப்பிடுகையில் நிதியியல் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் மிகவும் உணர்திறன் வாய்ந்தவையென வாடிக்கையாளர்கள் கருதுவதனால் அவற்றைப் பகிர்ந்துகொள்ளத் தயங்குகின்றனர். 2020இல் நெதர்லாந்து மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட கணிப்பீட்டின்படி, ஒல்லாந்து வாடிக்கையாளர்களில் 25 சதவீதமானோர் மட்டுமே நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான தகவல்களை மூன்றாம் தரப்பினருடன் பகிர்ந்திருந்தனர் (Laplante, & Kshetri, 2021).

## 5. திறந்த வங்கித்தொழிலிற்கான ஒழுங்குமுறைக் கட்டமைப்பொன்றிற்கான விவரக் குறிப்புக்கள்

உலகம் முழுவதிலுள்ள பல வங்கித்தொழில் துறை ஒழுங்குபடுத்துநர்கள் திறந்த வங்கித்தொழிலினை ஒழுங்குபடுத்துவதற்கான ஒழுங்குமுறைக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளன. ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அரபு இராச்சியம், இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் திறந்த வங்கித்தொழிலினை வசதிப்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தியுள்ளன. இந்நியாயாதிக்கங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைக் கட்டமைப்புக்களின் அடிப்படையில், திறந்த வங்கித்தொழிலிற்கான குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தரநியமங்களாகப் பின்வருவன கருத்திற்கொள்ளப்பட முடியும்.

(i) திறந்த வங்கித்தொழில் சேவைகளை வழங்குவதற்கும் சந்தைப்படுத்துவதற்குமான உரிமமளித்தல் பிரமாணங்கள்.

(ii) திறந்த வங்கித்தொழிலிற்கான ஆற்றல்வாய்ந்த ஆளுகை, செயற்றிறன்மிக்க இடர்நேர்வு முகாமைத்துவம், திறந்த வங்கித்தொழில் தரநியமங்கள், செயலிச் செயல்நிரலாக்க இடைமுகத் தரநியமங்கள், தரவு மற்றும் தகவல் பாதுகாப்பு விவரக்குறிப்புக்கள் மற்றும் வாடிக்கையாளர் தரவு, திறந்த தரவு மற்றும் திரட்டப்பட்ட தரவு தொடர்பான தொழிற்பாட்டுக் கட்டுப்பாடுகள் என்பன குறித்த ஒட்டுமொத்தக் கோட்பாடுகள்.

(iii) தரவு அணுகல் அனுமதிக் கண்காணிப்புக் கருவிகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேவைப்பாடுகள்.

(iv) நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட, சேகரிக்கப்பட்ட, பகிரப்பட்ட அல்லது செயன்முறைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தரவு, திறந்த தரவு மற்றும் திரட்டப்பட்ட தரவு என்பன தொடர்பான தரவுப் பாதுகாப்பு மற்றும் தனியுரிமைத் தேவைப்பாடுகள்.

(v) வாடிக்கையாளர் தரவுப் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளிக்கப்படாத அல்லது சட்டவிரோதமான தரவுச் செயன்முறைப்படுத்தலிற்கெதிரான அல்லது வாடிக்கையாளர் தரவு இழப்பு, அழிவு அல்லது சேதமடைதலில் இருந்தான பாதுகாப்பு ஆகியவற்றை நிச்சயப்படுத்துவதற்கான வாடிக்கையாளர் தரவுச் செயன்முறைப்படுத்தல் தேவைப்பாடுகள்.

(vi) தரவினைச் செயன்முறைப்படுத்துவதற்கான

சம்மதத்தினை வழங்குதல் மற்றும்/அல்லது சம்மதத்தினை இரத்துச் செய்தல், வாடிக்கையாளர் தரவை மாற்றுவதற்கு/தடுப்பதற்கான உரிமைகள், மற்றொரு கட்டுப்பாட்டாளருக்கு வாடிக்கையாளர் தரவை மாற்றுவதற்கான உரிமை மற்றும் தரவு தொடர்பிலான அனுமதியற்ற ஊடுருவல் குறித்து அறிவிக்கப்படுவதற்கான உரிமைகள் என்பன உள்ளிட்ட வாடிக்கையாளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள்.

(vii) திறந்த வங்கித்தொழில் சேவைகளுக்கான கட்டணங்கள் மற்றும் அறவீட்டுக் கட்டமைப்பு.

(viii) அதிகாரமளிக்கப்படாத அல்லது சட்டவிரோதமான அணுகல் அல்லது வாடிக்கையாளர் தரவுப் பரிமாற்றத்தினைத் தடுப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப, சட்ட மற்றும் நிறுவன ரீதியிலான வழிமுறைகளினைப் போதியளவிலான மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான தேவைப்பாடுகள்.

(ix) தரவு வகைப்பாடு, பகிர்தல், சேமித்தல், செயன்முறைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் தரவினை ஊடுகடத்தல் ஆகியவற்றின் பொருத்தமான மட்டத்திலான பாதுகாப்பினை நிச்சயப்படுத்துவதற்கான தேவைப்பாடுகள்.

(x) வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் நெறிமுறைசார் வியாபார நடவடிக்கைகள் குறித்த தேவைப்பாடுகள்.

## 6. திறந்த வங்கித்தொழிலிற்கான இலங்கையின் தயார்நிலை

### 6.1 இலங்கைப் பொருளாதாரத்திற்குத் திறந்த வங்கித்தொழிலின் நன்மைகள்

நிதியியல் கொடுக்கல்வாங்கல் தரவுகளை நிதியியல் கொடுக்கல்வாங்கல் செலவுகளைக் குறைப்பதற்கும் நிதியியல் அணுகலினை/ வசதிப்படுத்தலினை அதிகரிப்பதற்கும் சிறந்த நிதியியல் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கும் உகந்தவாறான சக்திவாய்ந்த கருவியொன்றாக மாற்றுவதன் மூலம் திறந்த வங்கித்தொழிலானது நிதியியல் வாடிக்கையாளர்கள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திற்கும் பல உள்ளார்ந்த நன்மைகளை வழங்குகின்றது. தெளிவான செலவிடல் விழிப்புணர்வு, புத்திசாலித்தனமான கொடுப்பனவுத் தெரிவுகள், நியாயமான கடன்வழங்கல் வீதங்கள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட நிதிய முகாமைத்துவம் ஆகியவற்றிற்காக வாடிக்கையாளர்கள் பல்வேறு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலிருந்தான அவர்களது நிதியியல் கொடுக்கல்வாங்கல்களினை ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க முடியும். வியாபாரங்களைப் பொறுத்த வரையில், இது கொடுக்கல்வாங்கல் செலவுகளை அவர்கள் குறைப்பதற்கு உதவும், அதேநேர கண்காணிப்புக்களின் மூலம் நிதியியல் நிலைமை குறித்த ஆழமான புலப்படுத்தலினை வழங்கும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் நிதியினை விரைவாக அணுகவும் துணைபுரியும். இந்த நன்மைகள் காரணமாக உலகளவில் ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம், யப்பான், ஹொங்கொங் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் ஏற்கனவே திறந்த வங்கித்தொழிலினை அறிமுகப்படுத்தியுள்ளன. இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தில் ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர் 4.5 பில்லியன் அல்லது மொத்தப் பொருளாதாரத்தில் 3 சதவீதம் தொடக்கம் 4 சதவீதம் கொண்ட தற்போதைய பெறுமதியிலிருந்து 2030ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர் 15 பில்லியன் அல்லது மொத்தப் பொருளாதாரத்தில் 12 சதவீதம் கொண்ட எதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சியினை அடைவதற்கு ஏனைய டிஜிட்டல் நிதியியல் சேவைகளுடன் இணைந்து திறந்த வங்கித்தொழில் பங்களிக்குமென்பதனால், இலங்கையும் இதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பயனடைய முடியும் (digital-economy-blueprint-2026). இந்த வெற்றியை அடைவதற்கான திறவுகோல் யாதெனில் தொழில்நுட்பம், வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் வியாபார அம்சங்களைக் கருத்திற்கொண்டு முறையான ஒழுங்குவிதிகள் மூலம் தரவுக் காப்பு மற்றும் பாதுகாப்பு மீதான நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதாகும். இலங்கை மத்திய வங்கி ஏனைய பங்குதாரர்களுடன் இணைந்து இதனை நடைமுறைப்படுத்துகின்ற பணியில் ஈடுபட்டுள்ளது.

## 6.2 இலங்கையில் திறந்த வங்கித்தொழிலினை நடைமுறைப்படுத்துவதற்கான தற்போதைய நிலையும் முக்கிய இடைவெளிகளும்

தற்போது, இலங்கையில் திறந்த வங்கித்தொழிலின் நடைமுறைப்படுத்தலானது இலங்கையில் நிதியியல் தொழில்நுட்பவியல் சார்ந்த புத்துருவாக்கங்களை ஊக்குவிப்பதற்கும் நிதியியல் வசதிப்படுத்தலின் ஊடாக நிதிக்கான அணுகலினை மேம்படுத்துவதற்குமான நோக்கொன்றுடன் அபிவிருத்தியடைந்து வருகின்ற கட்டமொன்றில் உள்ளது (www.cbsl.gov.lk). 2020இல், பாதுகாப்பான நிதியியல் தரவுப் பகிர்வுக்கான திறந்த வங்கித்தொழில் கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்காக இலங்கை மத்திய வங்கி பொதுமக்களின் கருத்துக்களைக் கோரியது. அதற்கமைய, இலங்கைக்குத் திறந்த வங்கித்தொழில் கட்டமைப்பை அறிமுகப்படுத்துகின்ற செயன்முறைக்கு உதவுவதற்காகத் தமது அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளுமாறு வங்கிகள், ஏனைய நிதியியல் நிறுவனங்கள், கொடுப்பனவுச் சேவை வழங்குநர்கள், நிதியியல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள், அரசாங்கம், அரசுசாராத, பல்புடை முகவராண்மைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளிட்ட தொடர்புடைய ஆர்வலர்களிடம் இலங்கை மத்திய வங்கி கோரியது (A200226 - PSD - Open Banking Framework 2). தற்போது, இலங்கையில், 2018இல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதும் வரையறுக்கப்பட்ட லங்காபே (தனியார்) நிறுவனத்தினால் தொழிற்படுத்தப்பட்டதுமான ஜஸ்ட்பே, சரிபார்ப்பின் ஊடாக வங்கிக் கணக்குகளை மூன்றாம் தரப்புச் செயலிகளுடன் இணைப்பதனை அனுமதிக்கின்றது (ஜஸ்ட்பே பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது). எனவே, புதிய திறந்த வங்கித்தொழில் கட்டமைப்பொன்றின் கவனமானது பாதுகாப்பான வழிமுறைகள் மூலம் கணக்குத் தகவல் பகிர்வு மீது பெரும்பாலும் காணப்படும். தற்போது, செயலிச் செயல்நிரலாக்க இடைமுகத்தின் அடிப்படையிலான வங்கித்தொழிலினை வசதிப்படுத்துவதற்கும் எதிர்காலச் சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒழுங்குமுறைக் கட்டமைப்பினை வழங்குவதற்கும் திட்டங்கள் காணப்படுகின்றன. நாட்டில் திறந்த வங்கித்தொழில் வளர்ச்சியடைகின்ற போது, அனைத்து ஆர்வலர்களுக்கும் பயனளிக்கும் பாதுகாப்பான மற்றும் வினைத்திறன்மிக்க திறந்த வங்கித்தொழில் சுற்றுச்சூழலமைப்பை நிச்சயப்படுத்துவதற்கு வங்கிகள், நிதியியல் தொழில்நுட்பவியல் கம்பனிகள் மற்றும் ஒழுங்குபடுத்துநர்கள் இடையேயான ஒத்துழைப்பு மிக முக்கியமானதாயமையும். இருப்பினும், இலங்கையில் திறந்த வங்கித்தொழிலினை நோக்கிச் சீராக நிலைமாறுவதற்குப் பின்வரும் முக்கிய இடைவெளிகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்:

(i) பல வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் மரபுசார் மைய வங்கித்தொழில் முறைமைகளிலேயே இன்னமும் தொழிற்படுவதுடன் இவை நவீன செயலிச் செயல்நிரலாக்க இடைமுகத் தரநியமங்களுடன் ஒருங்கிணைப்பதற்குக் கணிசமான அளவிலான மூலதன வரவுசெலவுத் திட்டமொன்றினைத் தேவைப்படுத்துகின்றன.

(ii) செயற்கை நுண்ணறிவினால் உந்தப்பட்ட தீர்வுகளுடன் ஒப்பிடுகையில் கொடுக்கல்வாங்கல் அத்தாட்சிப்படுத்தலிற்காக வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் குறுஞ்செய்தி மற்றும் ஒரு தடவைக் கடவுச்சொல் என்பவற்றினையே இன்னமும் தங்கியிருப்பதால் அத்தாட்சிப்படுத்தல் அல்லது பாதுகாப்புப் பொறிமுறைகளில் இடைவெளிகள் காணப்படுகின்றன.

(iii) திறந்த தரவுகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதற்கு முதிர்ச்சியடைந்த நிதியியல் தொழில்நுட்பவியல் சுற்றுச்சூழலமைப்பொன்று காணப்படாமை.

(iv) இலங்கைக்கான திறந்த வங்கித்தொழில் தொடர்பான ஒழுங்குமுறைக் கட்டமைப்பொன்று காணப்படாமை.

மேலும், மேம்பட்ட வங்கித்தொழில், புத்துருவாக்க நிதியியல் சாதனங்கள் மற்றும் திறந்த செயலிச் செயல்நிரலாக்க

இடைமுகங்களின் மூலம் நிதியியல் தரவுகளைப் பாதுகாப்பான முறையில் பகிர்ந்துகொள்வதனை வசதிப்படுத்துவதற்கு வங்கிகள், ஏனைய நிதியியல் சேவை வழங்குநர்கள், நிதியியல் தொழில்நுட்பவியல் கம்பனிகள் மற்றும் தொலைத்தொடர்புக் கம்பனிகள் ஆகியவை இணைந்து பணியாற்றுவதற்கான ஆளுகைக் கட்டமைப்பொன்றினை நிச்சயப்படுத்துவதற்குத் திறந்த வங்கித்தொழிலிற்கான ஒழுங்குமுறைக் கட்டமைப்பொன்று முக்கியமானதாக அமைகின்றது. அதேவேளையில், இலங்கையில் டிஜிட்டல் நிதியியல் சேவைகளை மேம்படுத்துவதற்கான உபாயமொன்றினை உருவாக்கின்ற செயன்முறையில் டிஜிட்டல் பொருளாதார அமைச்சு தற்போது ஈடுபட்டுள்ளது. இருப்பினும், இலங்கையில் திறந்த வங்கித்தொழில் மற்றும் டிஜிட்டல் நிதியியல் சேவைகளின் உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான பெரும்பாலான தரவுகள் பொதுமக்களுக்கு

**வரைபடம் 1: நடைமுறைப்படுத்தல்சார் வழிகாட்டல் குறித்த திட்ட அட்டவணை வரைபடம் - திறந்த வங்கித்தொழில்**

| நடைமுறைப்படுத்தல்சார் கட்டங்கள் | மாதங்களில் நடைமுறைப்படுத்தல்சார் காலக்கெடு | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| க1: உபாயம் மற்றும் அடித்தளம் | | | | | | | | | | | | | | | | | | | |
| அ) குறிக்கோள் மற்றும் நோக்கெல்லையினை வரையறுத்தல் | | | | | | | | | | | | | | | | | | | |
| ஆ) செயலிச் செயல்நிரலாக்க இடைமுகத் தரநியமங்களைத் தெரிவுசெய்தல் | | | | | | | | | | | | | | | | | | | |
| இ) தரவுக் கட்டமைப்பைக் கட்டியெழுப்பல் | | | | | | | | | | | | | | | | | | | |
| க2: தொழில்நுட்ப மையத்தினைக் கட்டியெழுப்பல் | | | | | | | | | | | | | | | | | | | |
| அ) செயலிச் செயல்நிரலாக்க இடைமுக நுழைவுவழிகளை நடைமுறைப்படுத்தல் | | | | | | | | | | | | | | | | | | | |
| ஆ) ஒப்புதல் முகாமைத்துவத்தினை வடிவமைத்தல் | | | | | | | | | | | | | | | | | | | |
| இ) பரிசோதனைக் கட்டமைப்பு மற்றும் உருவாக்குநர் தளங்களை அமைத்தல் | | | | | | | | | | | | | | | | | | | |
| க3: ஆளுகை மற்றும் நடைமுறைப்படுத்தல் | | | | | | | | | | | | | | | | | | | |
| அ) தொழிற்பாட்டுக் கட்டமைப்பினைத் தாபித்தல் | | | | | | | | | | | | | | | | | | | |
| ஆ) கட்டம் கட்டமான அறிமுகப்படுத்தல் | | | | | | | | | | | | | | | | | | | |
| இ) இணங்குவிப்புச் சரிபார்ப்பு | | | | | | | | | | | | | | | | | | | |
| க4: பின்னூட்டச் சுழற்சி (தற்போது முன்னெடுக்கப்படுகின்றது) | | | | | | | | | | | | | | | | | | | |

வெளிப்படையாக அணுக முடியாத தரவுகளாகத் தற்போது வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதனால் எதிர்காலத்தில் இலங்கையில் திறந்த வங்கித்தொழில் மற்றும் டிஜிட்டல் நிதியியல் சேவைகளை நடைமுறைப்படுத்தல் குறித்து மேலும் விரிவான கட்டுரைகளை எழுதுவதற்கு கட்டுரை ஆசிரியர் எதிர்பார்க்கின்றார்.

## 6.3 உத்தேச திறந்த வங்கித்தொழில் நடைமுறைப்படுத்தல் குறித்த வழிகாட்டல்

திறந்த வங்கித்தொழில் நடைமுறைப்படுத்தலினை நோக்கி இலங்கை மத்திய வங்கியும் அரசாங்கமும் ஏற்கனவே பல வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளதுடன் இதன் நடைமுறைப்படுத்தல் வழிகாட்டலானது இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைசார் நிலைப்பாட்டிலும் அரசாங்கத்தின் கொள்கை நிலைப்பாட்டிலுமே பெரிதும் தங்கியுள்ளது. இருப்பினும், திறந்த வங்கித்தொழிலிற்கான கட்டமைப்பு ஒன்றினை நடைமுறைப்படுத்துகின்ற செயன்முறையானது பொதுவாகப் பல கட்டங்களின் கீழ் ஏறத்தாழ 18 மாதங்களை எடுக்கும். வழிகாட்டலானது குறிக்கோள் மற்றும் நோக்கத்தை வரையறுத்தல், செயலிச் செயல்நிரலாக்க இடைமுகத் தரநியமங்களைத் தேர்ந்தெடுத்தல், தரவுக் கட்டமைப்பைக் கட்டியெழுப்புதல், செயலிச் செயல்நிரலாக்க இடைமுக நுழைவுவழிகளை நடைமுறைப்படுத்தல், ஒப்புதல் முகாமைத்துவத்தினை வடிவமைத்தல், ஒழுங்குமுறைப் பரிசோதனைக் கட்டமைப்பு மற்றும் உருவாக்குநர் தளங்களை அமைத்தல், தொழிற்பாட்டுக் கட்டமைப்பினைத் தாபித்தல், கட்டம் கட்டமான அறிமுகப்படுத்தல், இணங்குவிப்புச் சரிபார்ப்பு மற்றும் பின்னூட்டச் சுழற்சிகள் ஆகியவற்றினை உள்ளடக்க வேண்டும்.

ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நடைமுறைப்படுத்தல்சார் வழிகாட்டல்கள் குறித்த கற்கையின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட நடைமுறைப்படுத்தல் வழிகாட்டலானது மேலே உள்ள திட்ட அட்டவணை வரைபடத்தில் வழங்கப்பட்டுள்ளது (வரைபடம் 1).

## முடிவுரை

திறந்த வங்கித்தொழிலானது சேவை வழங்குகின்ற இயலளவுகள் மற்றும் மூலத் தரவுகள் தொடர்பான தமது பெறுமதிமிக்க முன்மொழிவுகளை வங்கிகள் மீள்வரையறுப்பதனை இயலச்செய்கின்ற சிறப்பானதொரு நிதியியல் சுற்றுச்சூழலமைப்பாகும். இது மூன்றாம் தரப்புச் செயலி உருவாக்குநர்கள் திறந்த செயலிச் செயல்நிரலாக்க இடைமுகங்களின் மூலம் செயலிகளை உருவாக்குவதனையும் கட்டியெழுப்புவதனையும் அனுமதிக்கின்றது, ஏனைய வங்கிகள் உட்பட மூன்றாம் தரப்பினருடன் பாதுகாப்பானதொரு முறையில் வாடிக்கையாளர்கள் தமது தரவைப் பகிர்ந்துகொள்ள அதிகாரம் அளிக்கின்றது, கொடுகடன் இடர்நேர்வின் மிகவும் துல்லியமான மதிப்பீடொன்றினை வசதிப்படுத்துவதுடன் நிதியியல் நிறுவனங்களுக்குக்குப் பாதகமான தெரிவுச் சிக்கல் ஏற்படுவதனைத் தணிக்கின்றது. இருப்பினும், வாடிக்கையாளர் தரவின் பாதுகாப்பையும் தனியுரிமையையும் பாதுகாக்கும் பொருட்டு நன்கு விவரிக்கப்பட்ட மற்றும் பரீட்சிக்கப்பட்ட ஒழுங்குமுறைக் கட்டமைப்பொன்றினுள் திறந்த வங்கித்தொழிலானது பிரயோகிக்கப்படவும் அனுமதிக்கப்படவும் வேண்டும். உலகம் முழுவதுமுள்ள நாடுகள் திறந்த வங்கித்தொழிலினை ஏதேனும் ஒரு வடிவில் வழங்குகின்ற வேளையில் குறித்த சில நாடுகள் திறந்த வங்கித்தொழிலிற்கான ஒழுங்குமுறைக் கட்டமைப்பினை ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளதுடன் பல நாடுகள் திறந்த வங்கித்தொழிலினை வசதிப்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை உருவாக்கின்ற செயன்முறையில் ஈடுபட்டுள்ளன. இலங்கையில் திறந்த வங்கித்தொழிலின் நடைமுறைப்படுத்தலானது வளர்ச்சிக் கட்டமொன்றில் காணப்படுவதுடன் பல கொடுப்பனவுச் செயலிகளும் உட்கட்டமைப்புக்களும் தொழிற்படுத்தப்பட்டு வருகின்றன (ஜஸ்ட்பே பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது). முதிர்ச்சியடைந்த நிதியியல் தொழில்நுட்பவியல் சுற்றுச்சூழலமைப்பொன்று காணப்படாமை, முழுமையான திறந்த வங்கித்தொழில் கட்டமைப்புமின்மையுடன் இணைந்த சில மரபுரிமைசார் பிரச்சனைகள் என்பன இலங்கை ஒரு முழு அளவிலான திறந்த வங்கித்தொழில் சுற்றுச்சூழலமைப்பொன்றினையும் தரநியமப்படுத்தப்பட்ட செயலிச் செயல்நிரலாக்க இடைமுகமொன்றினையும் நடைமுறைப்படுத்துவதில் சவால்களாகக் காணப்படுகின்றன.

இருப்பினும், அரசாங்கம் உட்பட ஏனைய தொடர்புடைய பங்குதாரர்களுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியானது இலங்கையில் திறந்த வங்கித்தொழிலின் நடைமுறைப்படுத்தலினை நோக்கிப் பல வழிமுறைகளை ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளது.

**உசாத்துணைகள்**


1. A200226 - PSD - Open Banking Framework 2
2. Brodsky, L., & Oakes, L. (2017). Data sharing and open banking. *McKinsey & Company*, *1105*, 01-08.
3. Currie, W. L., & Lagoarde-Segot, T. (2017). Financialization and information technology: themes, issues and critical debates–part I. *Journal of Information Technology*, *32*(3), 211-217.
4. digital-economy-blueprint-2026-01-21_1768987510_69709b768efd5.pdf
5. Eaton, B., Hallingby, H. K., Nesse, P. J., & Hanseth, O. (2014). Achieving Payoffs from an Industry Cloud Ecosystem at BankID. *MIS Quarterly Executive*, *13*(4).
6. Farag, H., Koirala, S., & McGowan, D. (2019). Peer pressure: How do peer-to-peer lenders affect banks' cost of deposits and liability structure?. *SSRN Electronic Journal. DOI: https://doi. org/10.2139/ssrn*, *3398843*.
7. Fintechnews, Singapore, Mar. 15, 2021. [Online]. Available: https://fintechnews.sg/49565/ india/indias-open-banking-landscape-thrives-on-the-back-of-digital-public-infrastructure/
8. Forester, T. (Ed.). (1985). *The information technology revolution*. MIT Press.
9. Guibaud, S. (2016). How to develop a profitable, customer-focused digital banking strategy: Open banking services and developer-friendly APIs. *Journal of Digital Banking*, *1*(1), 6-12.
10. Kazan, E., Tan, C. W., Lim, E. T., Sørensen, C., & Damsgaard, J. (2018). Disentangling digital platform competition: The case of UK mobile payment platforms. *Journal of management information systems*, *35*(1), 180-219.
11. Kim, K. H., Hwang, M. S., Jae, E. Y., Jun, S. H., & Kwon, M. C. (2016). A study on message queue safe proper time for open API fast identity online fintech architecture. *International Journal of Software Engineering and Its Applications*, *10*(5), 33-44.
12. Laplante, P., & Kshetri, N. (2021). Open banking: definition and description. *Computer, 54*(10), 122-128.
13. Open Banking, London, U.K., Sept. 7, 2018. [Online]. Available: https:// www.openbanking.org.uk/about-us/latest-news/open-banking-publishes-open-banking-standards-version-3-0/
14. www.cbsl.gov,lk

# நீங்கள் வாழ்நாள் முழுவதும் சேமித்தவற்றை மோசடிக்காரர்கள் அறுவடைசெய்ய இடமளிக்காதீர்கள்

நிறைவேற்ற முடியாத போலியான வாக்குறுதிகளை வழங்குவதன் மூலமே பெருந்தோட்ட மோசடிகள் அரங்கேற்றப்படுகின்றன




## முதலீடு செய்வதற்கு முன் வினவுங்கள்

- மிகவும் உயர்ந்த ஆதாயத்தைப் பெறுவதற்கான வாக்குறுதியளிக்கப்படுகின்றதா?
- மிகக் குறுகிய காலத்தில் ஆதாயம் கிடைக்கும் என வாக்குறுதியளிக்கப்படுகின்றதா?
- பயிர்கள் வளர்ச்சியடையாமலிருந்தாலும் ஆதாயம் கிடைக்கும் என கூறப்படுகின்றதா?
- இத்திட்டத்தை தொழிற்படுத்துபவரை கண்டறிய கடினமாகவிருக்கின்றதா?

பதில் **'ஆம்'** எனில், அது பெருந்தோட்ட முதலீட்டு மோசடியொன்றாக இருக்கக்கூடும்

## பணம் செலுத்துவதற்கு முன்னர் சரிபார்த்துக்கொள்ளுங்கள்

- கம்பனிகள் பதிவாளர்/ அடகுதரகர்கள் கட்டளைச் சட்டம் போன்றவற்றின் கீழ் பதிவொன்றினை பெற்றுக்கொண்டிருத்தலானது, வைப்புத் தொகைகளை ஏற்பதற்காக வழங்கப்படும் உரிமமொன்றல்ல
- உயர்ந்த ஆதாயம் தொடர்பில் வினவுங்கள் – விரைவாக பணம் செலுத்துமாறு யாரும் உங்களை அழுத்தம் கொடுப்பதற்கு அனுமதிக்காதீர்கள்
- நிலத்தின் சட்டரீதியான உரிமையை பரிசோதியுங்கள்
- முதலீடு செய்வதற்கு முன்னர் தொடர்புடைய அதிகாரிகளுடன் ஆலோசியுங்கள்

**முதலீடு செய்வதற்கு முன்னர் சரிபார்த்துக்கொள்ளுங்கள்**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

SAFEGUARDING BE SCAM PROOF FINANCIAL CONSUMERS